Registered as a News Paper    பக்கங்கள் 08    விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 12    (26 - 06 - 1992)    வெள்ளிக்கிழமை    ஓசை: 129

## போலிப்பத்திரம் அச்சிட்ட அச்சகம் முற்றுகை

போலி கல்வித் தராதரப் பத்திரங்கள், பிறப்பு, இறப்பு திருமண அத்தாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டைகள் ஆகியவற்றை அச்சிடுவதற்காக பயன் படுத்தப்பட்டு வந்ததாகச் சொல்லப்படும் அச்சகம் ஒன்றினை பொலிசார் முற்றுகையிட்டுள்ளனர். கொழும்பு - களனியாவில் நடத்தப்பட்ட முற்றுகையின்போது அச்சக உரிமையாளர் உட்பட மூன்று சந்தேக நபர்களை பொலிசார் கைதுசெய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் துணிகரத் தாக்குதல்

# சிங்கபுரவில் 7 இராணுவம் பலி

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு - பொலநறுவை மாவட்ட எல்லையில் சிங்கபுர என்னும் இடத்தில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் துணிகரத் தாக்குதல் ஒன்றை நடத்தினர். வெற்றிகரமான இத் துணிகரத் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர் பல ஆயுதங்களும், வெடிப் பொருள்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச் சாவைத் தழுவிக் கொண்டார்.

நேற்று அதிகாலை 5-45 மணியளவில் இத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. சிங்கபுர இராணுவ முகாமிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ள காவலரணிற்கு காவற் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரே இத்தாக்குதலுக்கு பலியானவர்கள் ஆகும்.

காவலரணுக்கு காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்த சுமார் 15 இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை வெளியேறி வேறு இடத்தில் இரவைக் கழித்தனர். பின்னர் அதிகாலை இவர்கள் காவலரணுக்குத் திரும்பியபோது காவலரணிற்குள் முன்னரே பிரவேசித்திருந்த விடுதலைப் புலிகள் காவலரணில் இருந்தவாறு இராணுவத்தினர் மீது தாக்குதலை மேற் கொண்டனர்.

புலிகளின் இத்துணிகரமான தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் பலர் படுகாயம் அடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்துக்கு உதவியாக சிங்கபுர இராணுவ முகாமிலிருந்து ஒரு 'பவல்' கவச வாகனம் சகிதம் இராணுவத்தினர் முன்னேறி வந்தபோது அவர்கள் மீதும் விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடாத்தப்பட்டது இத்தாக்குதலின் போது இராணுவத்திற்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.



மணலாற்றுப் போரில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிப் போராளிகள்

படம் : பிரதீப்

## வீரச்சாவு

### வீரவேங்கை அற்புதன்

மட்டு. சிங்கபுர இராணுவ முகாம் காவலரண் பகுதியில் 25 - 06 - 1992 விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 07 இராணுவத்தினர் பலியாகினர் பல நவீனரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை அற்புதன் (விபுலாநந்தன் உதயகுமார் மண்டூர் வெல்லாவெளி, மட்டக்களப்பு) வீரச்சாவு அடைந்தார்

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வீரவேங்கை புகழ் அரசன்

ஆனையிறவு கட்டைக் காட்டுப் பகுதியில் 23 - 06 - 92 அன்று இடம் பெற்ற மோதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவந்த வீரவேங்கை புகழ் அரசன் (பொன்னையா சுதர்சன் கோப்பாய் வடக்கு) என்னும் போராளி 25-06-92 அன்று வீரச்சாவு அடைந்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டு சிங்கபுர இராணுவ முகாம் காவலரண் பகுதியில் நேற்று அதிகாலை சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலை புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்.

- ★ ஜி 3 ரக துப்பாக்கி - 01
- ★ ஜி 3 மகசின் - 06
- ★ ரி 56-2 ரக துப்பாக்கி - 02
- ★ ரி 56-1 ரக துப்பாக்கி - 03
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 01
- ★ நேட்டோ ரவைகள் - 114
- ★ நடுத்தர ரவைகள் - 731
- ★ ஜே ஆர் கைக்குண்டு - 02
- ★ ரி 56 மகசின் - 19
- ★ ஏகே. கோல்சர் - 05
- ★ சப்ளே கோல்சர் - 01
- ★ சப்பாத்து - 04 சோடி
- ★ கிறபாக் - 02
- ★ தலைக்கவசம் - 02
- ★ மிலிரி பெல்ட் - 02

## சிங்களவரால் கொல்லப்பட்ட

## இரண்டு தமிழரின் உடல் புதைகுழியிலிருந்து மீட்பு

திருக்கோணமலை மாவட்டம் பூநகரியில் கடந்த ஒன்பதாம் திகதியன்று சிங்கள ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்ட இரண்டு தமிழ்ப் பொதுமக்களின் உடல்கள் புதைகுழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இருபதாம் திகதி பகல் 1 00 மணியளவில் செஞ்சிலுவைச் சங்கம், இராணுவம், பொலிசார் சேர்ந்து இருத உடல்களை புதைகுழியிலிருந்து எடுத்து பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## பூஸா முகாமில் மோதல் ஒருவர் பலி; 62 பேர் காயம்

(கொழும்பு)

பூஸா தடுப்பு முகாமில் நேற்று முன் தினம் இடம் பெற்ற கோஷ்டி மோதல்களில் ஒருவர் உயிரிழந்தார் எனவும், 62 பேர் காயமுற்றனர் என்றும் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை இரண்டு கோஷ்டிகளுக்கிடையே இம் மோதல் ஆரம்பித்தது என்றும், இவர்களை அங்கு முகாமிலிருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்றும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

(கொழும்பு)

இந்த வருடம் செப்டெம்பர் மாத இறுதிக்குள் நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் ஏ. ஸி எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்கள் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து தெல்லிப்பழை, மல்லாகம் ஆகிய பகுதிகளை நோக்கி நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார்.

நேற்று முற்பகல் 11 00மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலின்போது வே. கந்தசாமி (வயது 39) என்ற குடும்பஸ்தரே காயமடைந்திருக்கிறார். நேற்று முன் தினம் இரவும் இடையிடையே இப்பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருக்கிறது. (பா)

## திருக்கோணமலையில் கூட்டுறவு ஊழியர் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை ஈச்சிலம்பத்தை கூட்டுறவுச் சங்கத்தில் கடமைபுரியும் ஊழியர் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த இருபத்திரண்டாம் திகதி மூதூர் மாவடிச்சேனையைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி மனோரஞ்சன் (வயது 32) என்னும் தமிழ் பொதுமகனை கைது செய்த இராணுவத்தினர் அடித்து துன்புறுத்திய பின் முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர் இவர் திருமணமானவராவார்.

## அவிசாவளை பகுதியில் நான்கு இளைஞர் கைது

(அவிசாவளை)

அவிசாவளையில் வாடகைக்கிருந்த நான்கு யாழ்ப்பாண இளைஞர்களை அவிசாவளைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் அவிசாவளைக்கு அருகில் உள்ள புவக்பிட்டிய என்ற இடத்தில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணி மோதலில் 2 படை பலி; 5 பேர் காயம்

(கொழும்பு)

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுடன் மோதல்கள் இடம் பெற்றதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த மோதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகியதாகவும் ஐந்து பேர் காயமடைந்ததாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

## கேணல் இடை நிறுத்தம் பணக்கையாடல் காரணம்

(கொழும்பு)

பணமோசடியில் ஈடுபட்ட இராணுவக் கேணல் ஒருவர் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தலைமைச் செயலகத்தில் இந்த அதிகாரி 80 லட்சம் ரூபா கையாடல் ஒன்றில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### நீமியா உரம்

நெற்பயிருக்குச்சிறந்தஅடிக் கட்டு உரம்நீமியா உரம்அனை த்துப் பயிருக்கும் உகந்தது. பூச்சி புழுக்களிலிருந்து பாது காப்புத் தருவது நீமியாஉரம். கூடிய விளைச்சலைத் தருவது நீமியா உரம். கிலோ ரூ 15/- 20 கிலோ ரூ.260/-. அண்ணா கோப்பி கடைகளிலும்கிடைக் கிறது மில்க்வைற். (சி-4588)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் நன்னீர்க் கிணறு, குடியிருப்பு வசதிகளுடன் 5 பரப்புக் காணியும், சிவன் கோவில் வீதியில் 3,1/4 பரப் புக் காணியும் விற்பனைக் குண்டு. தொடர்பு; த.வேலா யுதம், சட்டத்தரணி, ஸ்ரே சன் றோட், சாவகச்சேரி. (2712)

### மாணவர் பதிவு அட்டை விநியோகம்

1990-91 கல்வியாண்டு வெளிவாரி மாணவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகத்தினால் மாணவர் பதிவு அட்டை வெளிவாரி பிரிவினால் வழங் கப்பட்டு வருகிறது.

இம்மாணவர்களுக்கான பரீட்சை இவ்வருடம் ஒக் டோபர் மாத இறுதிப்பகுதி யில் இடம் பெறுமென தெரி விக்கப்படுகிறது. (05)

### நினைவு தினம்

கலையரசு சொர்ணலிங்கம் நினைவு தினம் வரும் சனிக் கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடை பெறவுள் ளது.

இதனை யொட்டி பாட சாலை மாணவரிடையே பேச்சு,கட்டுரை,வினா-விடை, நாடகப் போட்டிகள் நடை பெறவுள்ளன.

---

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

புதிய வெளியீடு

# EAGLE HAS LANDED

(கழுகு தரையிறங்கி விட்டது)

[4569]

---

யாழ். கோட்ட சர்வதேச
கூட்டுறவு தின விழா

## போட்டி நிகழ்ச்சிகள்

மேற்படி விழாவை முன்னிட்டு பின்வரும் போட்டி கள் நடைபெறும்.

1. பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் (கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு- I, மத்திய பிரிவு II, மேற்பிரிவு.)
   (அ) பேச்சு (ஆ) கட்டுரை
2. அங்கத்தவர்களுக்கான போட்டிகள்
   (அ) பேச்சு (ஆ) கட்டுரை (இ) நாடகம்
   (ஈ) விநாடிவினா [உ] விளையாட்டு
3. பணியாளர்களுக்கான போட்டிகள்
   (அ) பேச்சு (ஆ) கட்டுரை

போட்டிகளில் பங்கு பற்றும் அனைவரும் 30-6-92-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து செயலாளர், கூட்டுறவு தின விழாக்குழு, யாழ்.கோட் டம், ப. நோ. கூ. சங்கம், யாழ்ப்பாணம் என்னும் முக வரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்

மேலதிக விபரங்களையும் மேற்குறிப்பிட்ட முக வரியில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
கூட்டுறவு தின விழாக்குழு,
யாழ். கோட்டம்.

(கி/4599)

---

# நினைவு கூருகின்றோம் . . .

## 1992-06-26

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோண மலை சாம்பல்தீவுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**சிறைச்செல்வன்** (கதிர்காமத்தம்பி தவராஜா - குச்சவெளி, திருக்கோணமலை )

1987 ஆம் ஆண்டு குளியானில் சிறிலங்கா இரா ணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். மகேந்திரன்** (நடராசா நாகராசா - பெரியதப்பனை. செட்டிக்குளம் )

மணற்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட் கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். கீர்த்தி** [பாக்கியநாதன் சுதர்சன் - காங் கேசன்துறை.]

1988 ஆம் ஆண்டு அம்பாறை அக்கரைப்பற்றுப் பகு தியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக் கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**நகுலன்** (புனைதீன் - அட்டாளைச்சேனை, அக்க ரைப்பற்று, அம்பாறை.)

1989 ஆம் ஆண்டு வவுனியா / ஓமந்தை பன்றிக் கெய்தகுளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கி யிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சின்ன மகேந்தி** [இராசரத்தினம் கிருபாமூர்த்தி- தென்னன்மரவடி, திருக்கோணமலை.]

**அச்சுதன்** [கணேஸ் - பன்குளம், திருக்கோணமலை.)

வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர்-

**மேஜர் மாறன்** (சின்னத்துரை சுதமாரன் - வவுனிக் குளம், மாங்குளம், முல்லைத்தீவு )

**சுமன்** [இரத்தினம் அரியராஜா - புதுக்குளம், ஒ-டி சுட்டான், முல்லைத்தீவு ]

**பொபி** [தவகாந்தருபன்-பொன்னகர், முள்ளியவளை, முல்லைத்தீவு ]

**சபா** [சுந்தரலிங்கம் - முல்லைத்தீவு ]

**லெப். அருள்** [சிதம்பரப்பிள்ளை தமிழரசன் - பதி னியார் மகிழங்குளம், வவுனியா.]

**நவம்** [முத்துச்சாமி இந்திரகுமார் - மருதங்குளம், ஓமந்தை, வவுனியா ]

**கேசவன்** (செல்லமுத்து றஜீந்திரன் - வவுனியா.)

**கப்டன் றூபன்** [இராசையா சிவகுமாரன் - கண்டா வளை, பரந்தன், கிளிநொச்சி ]

**அகிலன்** (மதிவண்ணன் - திருநகர், கிளிநொச்சி)

**லெப். நித்திலா** (பவானி நல்லையா - கொம்மாந் துறை, கம்பர்மலை, வல்வெட்டித்துறை.)

**2-ம் லெப் முரளி** [குணராசா குமாரதாஸ் - 4-ம் ஒழுங்கை, முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப் பாணம்.]

**விஜயன்** [ரவிக்குமார் - யாழ்ப்பாணம்]

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு கொக்காவில் பகு தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண் எறி கணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**தாஸ்** [அருணம்பலம் சந்திரமோகன் - கரிப்பட்டை முறிப்பு, முல்லைத்தீவு ]

**சங்கர்** [செல்லையா சந்திரகுமார் - கோணாவில், கிளி நொச்சி.]

வவுனியா - மன்னார் - யாழ். வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சா வெய்திய -

**2-ம் லெப். அசோக்** [கிருஸ்ணா செல்வராசா - இரணைஇலுப்பைக்குளம், கல்மடு, வவுனியா.]

**மௌலிசன்** [கந்தசாமி யோகன் நித்தியநாதன் - பூவரசங்குளம், வவுனியா ]

**கணேசலிங்கம்** [ராக்கப்பன் நாகராஜ் - சிறிராம புரம், மாறம்பைக்குளம், வவுனியா.]

**நித்திலன்** [நா. குணராசா - வவுனியா ]

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணு வத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அன்ரனி** [கிசுவர் நாகலிங்கம் குணராசா - கெற் பெலி, மிருசுவில்.]

அம்பாறை காரைதீவுப் பகுதியில் சிறிலங்கா இரா ணுவத்தினரால் கைது செய்யப்பட்டோரில் சடலங்க ளாக மீட்கப்பட்ட 30 தமிழர்கள் தாண்டியடிப் பகு தியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல் லப்பட்ட 5 தமிழ் இளைஞர்கள்.

மட்டக்களப்பு / இராஜபுரம், கரடியனாறுப் பகுதி யில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கையின் போது படுகொலைசெய்யப்பட்ட தமிழ் பெண்-துறை நீலாவணை சவளக்கடைப் பகுதியில் சிறிலங்காப்படை யினரால் சுட்டுக்கொலைசெய்யப்பட்ட 6 தமிழர்கள்.

யாழ். கொக்குவில் பகுதியில் சிறிலங்காப் படை யினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறி கணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 6 குழந்தைகள் உட்பட 7 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இரா ணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல் லப்பட்ட பெரிய புல்லுமலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(கி/4595)

---

# 3 ஆம் ஆண்டு நினைவுநாள்



நாட்டுப் பற்றாளர்
**திருமதி**
**செல்வம் செந்திவேல்**

ஈகைச்சாவு: 28-06-1989

திதி ; 26 - 06 - 1992

[மயிலிட்டியில் தேசவிரோதிகளால் சித்திர வதை செய்யப்பட்டு வெட்டிக்கொல்லப் பட்டார்]

தேசத்தின் மீது நேசம் கொண்டிருந்தீர்
பாசம்பொங்கியெழ பூரித்துநிற்கின்றோம்
வேசம் போட்டவர், உமை வெட்டிச் சாய்த்தவர்
நாசமாய் போனகதை நாடறியும்

வீரமாணிக்கதேவன்துறை,
மயிலிட்டி.



**வீரவேங்கை வைத்தி**
**செந்திவேல் தேசிங்கராஜா**

வீரச்சாவு: 26 09-1988

[அளம்பிலில் இந்தியப்படையினர் மேற் கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு]

மண்ணின் விடுதலைக்காய் மறவனே உழைத்து
கண்ணின் மணிபோல காத்திருந்தீர் எம்மை
எண்ணின் நெஞ்சமெல்லாம் விம்மும்
விண்ணில் நீர் என்றாலும் நினைவுகள் எம்மோடு

**நண்பர்கள், உறவினர்கள்**

(சி/4601)





அன்பின் பிரான்சிஸ்

எத்தனை வருடங்கள் ஓடிவிட்டன. ஆனாலும் உன் நினைவு மட்டும் எம்மை விட்டு ஓட மறுப்பது ஏன்? நீ உண்மையாக வாழ்ந்தாய்; மட்டக்களப்பு மண்ணின் விடுதலைப் பண் பாடப்படும் போது உனது பெயர் இணைக்கப்படாமலிருக்க மாட்டாது அந்தப் பண்ணின் ஆரம்ப வரிகளில் நிச்சயம் உனது பெயர் இருக்கும் அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன் நாங்கள் சைக்கிளில் திரிந்தது. ஆற்றில் தோணியில் பயணமாகியது அந்தப்போர்க்களங்கள்... எல்லாமே இன்று போலிருக்கின்றன. நீமட்டும் அருகிலில்லை.

நீயும் நானும் டேவிட்டும் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு சைக்கிளில் எமது பிரயாணத்தை தொடங்கிய அந்த நாட்களை நினைத்துக்கொள்கிறேன். போகும் போது நீ என்னவெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தாய். உனது ஆசைகள்திட்டங்களை எல்லாம் நிறைவேற்றக் கூடியளவுக்கு அப்போது எம்மிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை இரண்டே இரண்டு கைத்துப்பாக்கிகளுடனேயே எமது பயணத்தை ஆரம்பித்திருந்தோம் போகும் போதே வழியில் பரந்தனில் சிவதாஸன் என்ற துரோகிக்கும் வவுனியாவில் புளொட் இயக்கத்தினரை காட்டிக்கொடுத்த தர்மே என்ற சிங்களவனுக்கும் மரண தண்டனை வழங்கி விட்டுச் சென்றோம்.

காட்டுப்பாதைகளூடாக மதவாச்சி வரை மிதிவண்டியில் சென்றோம். அங்கிருந்து பேருந்திலும் புகையிரதத்திலும் சென்று மட்டக்களப்பு மண்ணை மிதித்தோம். அப்போது நீ என்ன சொன்னாய் ''அப்பாடா... மட்டக்களப்புக்கு ஆயுதம் வந்திட்டுது: இனித்தான் ஸ்ரீலங்கா படையாட்டு தொடங்கப் போகுது'' இந்த வார்த்தைகளை நினைத்துக்கொள்கிறேன். இன்று போராட்டம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்க்கும் போது இரண்டு சுழல் துப்பாக்கிகளின் சக்தி மிக அற்பமானதே. ஆனால் அவைதான் அங்கிருந்து ட்றக்டர் கணக்காக ஆயுதங்களை கைப்பற்றுவதற்கு வித்தாக அமைந்தன. ''யாழ்ப்பாணம் கோட்டை விடுவிக்கப்பட்டதற்கு மட்டக்களப்பு ஆயுதங்களின் பங்கும் ஒரு காரணமாக இருந்தது'' என்று கொக்கட்டிச்சோலையில் நியூட்டன் பேசும் போது நான் அந்த இரு சுழல் துப்பாக்கிகளையும் தான் நினைத்துக்கொண்டேன்.

நாங்கள் மட்டக்களப்பு சிறையிலிருந்து நிர்மலாவை மீட்டுவந்த அந்தக் காட்சியை நினைத்துக்கொள்கிறேன். அது உனது இழப்பின் கொடுமையை எனக்குப் புரியவைக்கிறது. எப்படி இயங்கினாய் நீ? ஒரு பம்பரம்போல-சிறைச்சாலைக்கு வெளியில் நின்ற சிங்களக் காவலனொருவனை நாம் மடக்கி உள்ளே போக முயற்சித்தோம், சிறைக்காவலர்கள் வேடத்தில்நாம் சென்றிருந்தாலும் கதவைத்திறந்த ஆரம்பத்திலேயே உள்ளேயிருந்தவர்களுக்குநிலமைபுரிந்துவிட்டது. எல்லோருமாகக் கதவை இழுத்து மூட முயற்சித்தனர். உனது கை நடுவில் அகப்பட்டுவிட்டது. நீ கத்தினாய். எப்படித்தான் அசுரபலம் வந்ததோ? உள்ளே சென்றுவிட்டோம் நாம்போன வேகத்தில் பொலிசாருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தகாவலனை தடுக்கப்பாய்ந்தாய் நீ, அவன் உயரமானவன். நீயோ குள்ளம் அங்கிருந்தகதிரையின் மேலேறி அவனது தலையில் 45-சுழல் துப்பாக்கியினால் நீ அடித்தாய் அவன் சுருண்டுவீழ்ந்தான். இதற்குள் ஒருகாவலன் நிர்மலாவின் அறைத்திறப்பை எடுத்துக்கொண்டு ஓடி மறைந்துவிட்டான் நாங்கள் கதவை உடைத்தோம். உடைத்ததின் பின்னர் தான் கதவின்கனம் குறித்து ஆச்சரியப்பட்டோம். அந்தப்பணி வெற்றிகரமாக நிறைவேற நீயும் சந்திரண்ணாவும்தான் காரணம். சந்திரண்ணா வெளித்தொடர்புகளை கவனித்துக் கொண்டார், ஏற்கெனவே நீ அந்தச்சிறையில் இருந்தவன் என்றவகையில் உனக்கு அந்தச் சிறைச்சாலை அமைப்பு, நடைமுறைகள் பற்றித்தெரிந்திருந்தது. அதனால்



கப்டன் பிரான்சிஸ்

எமது வேலை சுலபமாகியது.

பிரான்சிஸ்! உன்னை நினைக்கும் போதுதண்டவாளப்பாதையால் நாம்நடந்துகொண்டு வரும்போது நீ சொன்னபகிடிதான் முதலில் நினைவுக்கு வரும். மட்டக்களப்பிலிருந்து நிர்மலாவை புகையிரதம், பேருந்துவழியாக மன்னாரை நோக்கிக்கூட்டிக்கொண்டு வந்தோம் மதவாச்சி வீதியில் நாங்கள் சென்ற பேருந்தை விலத்திக்கொண்டு சிறிலங்கா இராணுவத்தினர் சென்றனர் அவர்கள் நேரியகுளம் சந்தியில் திடீரச் சோதனை செய்வது வழக்கம் ஆகையால் நாம் அதற்கு முன்னரே இறங்கி விட்டோம், அங்கிருந்து மடுறோட்வரை தண்டவாளப் பாதையால் ஒரே நடைதான்,

நீண்டநேரநடை- இளைவருக்கும் தாகம்; அந்த நடு இரவில் தண்ணீர் எங்கே இடைக்கும் என்பது தெரியவில்லை. ஒருவருடைய வேதனையை மற்றவருக்கு காட்டாமல் நடந்து கொண்டிருந்தோம். அப்போது நீ சொன்னாய் ''காக்கா! தமிழீழம் கிடைச்ச உடன தண்டவாளக்கரையெல்லாம் நாங்க கிணறு தோண்டி வைப்பம் ஏனெண்டா அப்ப முஸ்லீம்கள் தங்களுக்கு ஒரு நாடு வேணும் எண்டு நம்மளோட சண்டை பிடிப்பானுகள், அந்தநேரம் எருக்கலம்பிட்டி முஸ்லீம் காத்தான்குடிக்கு போக வேண்டியிருக்கும்; அவனும் இப்ப நாம போறமாதிரித்தான் தண்டவாளக் கரையால நடக்க வேண்டியிருக்கும். அப்ப அவன் தண்ணிவிடாயால அவதிப்படக்கூடாதல்லா'' என்றாய். இதைக் கேட்டு நானும், நிர்மலாக்காவும், கூடவந்த சகோதரியும் சிரித்தோம். இடையில் ஏதோ ஒரு பாழ்ங்கிணறு தென்பட்டது நீ ஒரு மெழுகுபையில் நிர்மலா அக்காவின் ஒரு சேலையைக்கட்டி தண்ணீர்அள்ளித்தந்தாய்மெழுகுப்பை தண்ணீர் கோலுவதற்கு வசதியாக ஒரு கல்லைக் கட்டித்தொங்கவிட்டிருந்தாய் அந்த நேரம் அந்தத் தண்ணீர்தேவாமிர்தமாக இருந்தது அடுத்த நாள் அனைவருக்குமே வயிற்றோட்டம். அது குடித்தது பாழ்ங்கிணற்றுத் தண்ணீர்தான் என்பதை உறுதிப்படுத்தியது.

அன்று முஸ்லீம்கள் பற்றி நீ வேடிக்கையாகச் சொன்னாய் ஆனால் வரலாறு மிக மோசமான படிப்பினைகளை எமக்குத்தந்துள்ளது. அதை நான் மட்டக்களப்பு மண்ணுக்கு மீண்டும் சென்றபோது தான் தெரிந்து கொண்டேன் முஸ்லீம்கள் பற்றி வேடிக்கையாக இப்படிச் சொன்னாலும் முஸ்லீம்கள் மீது நடவடிக்கை எடுக்கும் போது பல முறை சிந்தித்து எடுக்க வேண்டும் என்றாய். அப்படித்தான் நடந்து கொண்டோம். ஆனால் எமது பெருந்தன்மைகள் பலவீனங்களாக உணரப்பட்டுவிட்டன என்னையும் உன்னையும் எமது நண்பர்களையும் உபசரித்த குடும்பத்தவர்களை அகதி முகாமில் காணும் அவலத்தை ஏற்படுத்திவிட்டது.

இரண்டு எஸ் எம் ஜிக்கள், நாலு ரிப்பிட்டர்கள், இரு சுழல் துப்பாக்கிகள், ஒருவேட்டைத்துப்பாக்கி- இவைதான் நாம் களுவாஞ்சிக்குடிபொலிஸ் நிலையத்தை தாக்கச்செல்லும் போது கொண்டு சென்ற ஆயுதங்கள். அதிலும் ஒரு ரிப்பிட்டர் இயங்கவில்லை, தாக்குதலுக்கு முன் எந்தப்பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்துவது என்று திட்டமிடும் போது நீ களுவாஞ்சிக்குடி மீது தாக்குதல் நடத்துவோம் என்றாய், புளொட் இயக்கத்தைச் சேர்ந்த பார்த்தனின் மறைவுக்கு காரணமாக இருந்தவர்கள் அவர்கள். ஆகவே அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் திமிரை அடக்கவேண்டும் என்றாய். நாம் தாக்குதல் நடத்தினோம் மட்டக்களப்பின் செல்வமான பரமதேவாவையும், ரவியையும் இழந்து ஒரேயொரு ரைபிளை மட்டுமே கைப்பற்றினோம். அத்தாக்குதலில் சயனைட் உட்கொண்ட நிலையில் ''அம்மாட்ட சொல்லுங்கோ உங்கட மகன் சண்டையில தான் செத்தவெண்டு'' என்று பரமதேவா சொன்னது உன்னையும் என்னையும் ஏன் அந்தத்தாக்குதலில் பங்குபற்றிய அனைவரையுமே பாதித்திருந்தது.

அதற்கு பின் வரலாறு வேகமாக ஓடியது. ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை தாக்கி வெற்றி கொண்டோம் அதன் பின் நீயும் நானும் இணைந்து தாக்குதலில் ஈடுபடசந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் யாழ்ப்பாணம் வந்து விட்டேன். நீ மட்டக்களப்பில் செய்யும் சாதனைகளை பற்றி எல்லோரும் சொன்னார்கள். தம்பட்டையில் நடு வீதியில் நின்று

( 6ஆம் பக்கம் பார்க்க)

# யானையைப் பார்த்தவர்கள்

யானை என்றால்என்ன? அது எப்படிப்பட்டதாக இருக்கும். பிறவியிலேயே கண் பார்வையை இழந்துவிட்ட ஐந்து பேர்களின் ஆதங்கம் இது.

யானைக்கு முகத்தில் நீண்டு வளைந்து தொங்கிக்கொண்டிருக்கும் தும்பிக்கை உண்டு. பெருத்த உருவம். பெரிய காது, குழம்புகளில் பிளவு இல்லாத உருண்டையான மொத்தக் கால், இப்படிப் பலவாறாகவும் விபரித்தார் ஒருவர்.

தும்பிக்கை எப்படி இருக்கும் இது பார்வை இழந்தவர்களில் ஒருவரின் கேள்வி.

இதனை எப்படிப் புரிய வைக்கலாம் என்று சிந்தித்தவர். சட்டென நீளமான சதைப்பிடிப்பான கை மாதிரி இருக்கும். ஆனால் அது எல்லாப் பக்கமும் வளையும், எங்கடை மூக்கு மாதிரி அதிலையும் ஓட்டை இருக்கும். அதனால்தான் யானை சுவாசிக்கும் நீட்டி முழக்கினார்.

''அட்பிடியெண்டா யானையின் மூக்குத்தானே தும்பிக்கை? அதை ஏன் பிறகு கை எண்டு சொல்லுவான்'' இது பார்வையிழந்திருந்த இன்னுமொருவரின் குழப்பம்.

இவர்களுக்கு எப்படி ஒவ்வொன்றாகப் புரிய வைப்பது என்பது சிரமம் என்பதைப் புரிந்து கொண்டவர் ஐவரையும் நிஜ யானை ஒன்றைக் காட்ட அழைத்துச் சென்றாராம்.

ஒருவர் யானையின் கால் பகுதிகளை மட்டும் தடவிப் பார்த்தார். மற்றுமொருவர் யானையின் வயிற்றுப் பகுதியை மட்டும் தொட்டுப் பார்த்தார். இன்னுமொருவருக்கு யானையின் காதுகள் மட்டும் எட்டியது.

நாலாமவர் யானையின் தும்பிக்கையை மட்டும் பிடித்துப் பார்த்தார் ஐந்தாமவருக்கு யானையின் வால் மட்டும் கிட்டியது.

யானையைப் பார்த்த ஐவரும் ஐந்து விதமான அபிப்பிராயங்களை வெளியிட்டனர்.

கால் பகுதியை தடவிப் பார்த்தவர், யானை உரல் மாதிரி என்றாராம், வயிற்றுப்பகுதியை தொட்டுப்பார்த்தவரோ இல்லையில்லை யானை சுவர்மாதிரிஎன்றாராம்.

காதுகளை மட்டும் தொட்டுப் பார்த்தவரோ யானை சுளகு மாதிரி என்றாராம். தும்பிக்கையை பிடித்துப் பார்த்தவர் யானை உலக்கை மாதிரி எனக் குறிப்பிட வால் பகுதிமட்டும் கிட்டியவர் யானை விளக்குமாறு மாதிரி என வாணித்தாராம்.

★ ★ ★

இது ஒரு விடயத்தின் முழு அம்சங்களையும் புரிந்துகொள்ளாமல் அது பற்றிக் கருத்து வெளியிடுவது எத்தனை முட்டாள்தனமானது என்பதை விளக்குவதற்கு தமிழ் மக்களிடையே நிலவிவரும் ஒரு பாரம்பரியக்கதை.

பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆலோசித்து வருவதாகக் கூறி வெளிவரும் செய்திகள் ஏனோ இந்தக் கதையைத்தான் நினைவுக்கு கொண்டுவருகின்றது.

இலங்கைத் தீவில் சமாதானத்தையும் அரசியல் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்துவதற்குரிய வழிமுறைகளை விதந்துரைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற மகுடம் சூட்டப்பட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான மங்கள முனசிங்காவின் தலைமையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு தத்தித்தத்தி தடுமாறும குழந்தையாக ஒருவருடத்தைப் பூர்த்தி செய்யப்போகிறது.

நாடு பிளவுபடுவதைத் தவிர்ப்பதற்கும், அப்பாவிக் குடிமக்கள், ஒருகுறிக்கோளுக்காகப் போரிடும் இளைஞர்கள், ஆயுதப்படையினர் கொல்லப்படுவதை தவிர்ப்பதற்கும் நோக்கம் கொண்டிருப்பதாக அப்போது சொல்லப்பட்டது.

இவ் இடத்தில் அமைச்சர் தொண்டமானின் ஒருகூற்றையும் சுட்டிக் காட்டுதல் தகும். ''வடக்கு, கிழக்கு பிரச்சினையை இனிமேலும் ஒத்திப் போடவும் முடியாது தட்டிக்கழிக்கவும் முடியாது. இனிப்பான பேச்சுக்கள் மூலமும், உபயோகமற்ற வாக்குறுதிகள் மூலமும், இந்தப் பிரச்சினையை தீர்த்து விட முடியாது. கூட்டங்களும், தொடர் மாநாடுகளும், நடத்துவதன் மூலமும் இப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. சாத்தியமானதும், திடமானதுமான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்'' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் தமிழ் மக்களின் பிரச்சினை என்ன என்பதை புரிந்து கொண்டவர்களாகவோ அல்லது புரிந்து கொண்டவர்களாகக் காட்டிக் கொள்வதாகவோ தென்னிலங்கை அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர் எவரையும் சுட்டிக்காட்ட இயலவில்லை.

யாழ்ப்பாணத்தை இராணுவ ரீதியில் வெற்றிகொண்டுவிட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என மனப்பால் குடிக்கும் சிலரும், வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு சபையை உருவாக்கி விட்டால் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று கனவு காண்பவர். சிலரும், ஏதோ சில அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலமாக பிரச்சினையை இல்லாமல் செய்து விடலாம் என்ற கற்பனையில் சிலரும் காணப்படுகின்றனர்.

ஆனால் இவை அனைத்துக்கும் மேலாகத் தமிழ் மக்கள் தாம் ஒரு தேசிய இனம் என்பதை நிலை நாட்டவும், தமது பாரம்பரிய வாழிடத்தை - அப்புவும், ஆச்சியும் ஆடி மகிழ்ந்த அன்னை பூமியை - பேணிப் பாதுகாத்து வளம்படுத்தவும், தமது நலன்களையும், எதிர் காலத்தையும் தாமே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வளமோடு வாழவும் நாட்டம் கொண்டுள்ளனர். அதற்காகவே போரிடுகின்றனர். எனவே தமிழர்களைத் தமிழர்களாக ஏற்றுக் கொள்வதும், அவர்களுக்கென ஒரு வாழிடம் உண்டு என்று அங்கீகரிப்பதும்தான் பிரச்சினைகள் தீர்க்கப்படும் பாதையில் அரிச்சுவடாக அமைய முடியும். இதைவிடுத்து எத்தனை மாநாடுகள், கருத்தரங்குகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டாலும் பிரச்சினைகள் தீர்க்கப்படப் போவதும் இல்லை, அமைதி தோன்றப் போவதும் இல்லை என்பது தெளிவு.

ஆனால் இந்த உண்மையை பௌத்த சிங்களப் பேரினவாதம் இலகுவில் ஏற்றுக் கொண்டுவிடப்போவதில்லை. ஆதலால் தமிழ் மக்கள் சற்றும் தளராமல் போராட வேண்டியது காலத்தின் தேவையாகிறது.

-இளையவன்-

## சிறுகதை

# அவலங்கள் இனித்தொடராது

அனைத்துலகப் பெண்கள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை.

நன்றி: சுதந்திரப் பறவைகள்

## கிறிஷா யொவித்தா

கடலலைகளைத் தழுவியபடி குளிர் காற்று ஜில்லென்று வீசிக்கொண்டு இருந்தது. அதற்குச் சம்மதிக்காதன போன்று அலைகள் மேலெழுந்து சிறிக்கொண்டிருந்தன. வானம் அமைதியாக இருந்தது. கடற்கரையை அண்டியபடி இடையிடையே சிறிய சிறிய குடிசைகள் அவை புதிதாக இப்போதுதான் உருவாகியிருக்கின்றன என அவற்றின் வடிவமைப்புக் காட்டிக் கொண்டிருந்தது. சிறிது தூரம் தள்ளி கல்வீடுகள். ஒரு மாதாகோயில், இதுதான் அந்தச் சின்னக் கிராமத்தின் சராசரித் தோற்றம், கடலன்னையை நேசிக்கும் மக்கள் வாழ்கின்றார்கள் என்பதை பெரும்பாலான வீடுகள் தெளிவாக்கின.

சரியாக அடைக்கப்படாத குடிசையின் ஒரு பக்கத்தினால் குளிர்காற்று உட்பிரவேசித்திருக்கவேண்டும்போல செல்வி திறக்க விரும்பாத கண்களுடன் மெல்லியதாக ''ஆண்டவரே என்ன குளிர்?, ஐயா கடலில் என்ன பாடுபடுவார் பாவம்'' என்று முணுமுணுத்துக்கொண்டவள். தலையைத் திருப்பிப் பார்த்தாள். ''இவனை எத்தனை தரம்தான் போர்த்துவிடுகிறது. சரியான மோசம்'' அன்பு கலந்த கண்டிப்புடன் எழுந்து அருகில் கிடந்த போர்வையை எடுத்து தம்பியையும், தங்கையையும் போர்த்துவிட்டு படுத்தவளுக்கு தூக்கமே வரவில்லை. நிமிர்ந்து கூரையைப் பார்த்தாள். வானத்தில் இருந்த ஒருசின்ன நட்சத்திரம் அவளைப பார்த்துச் சிரித்தது. ''ம்... நானும் ஒரு நட்சத்திரமாகப் பறந்திருந்தால் எவ்வளவு சுதந்திரமாக' நினைவுகள் உடலைச் சிலிர்க்க வைத்தன.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ தெரியாது. வெளியே குழந்தைகள் அழும் சத்தமும் ஆட்கள் ஓடும் சத்தமும் கேட்கவே துடித்து எழுந்தவள் மனதில், ''இன்டைக்கும் அப்படித் தானோ? இல்லை அப்படியிருக்கக் கூடாது'' என்று எண்ணியவளுக்கு விடை கூறுவது போல யாரோ வெளியிலே சொல்லிக் கொண்டு போவது கேட்டது. 'கரைக்குக்கிட்ட கன்போட் வந்து நிற்குது பிள்ளை. அவன் பீரங்கி அடிக்க முன்னம் ஓடவேணும்' மனம் அலறிக் கொள்ளவே தினேசையும் காயத்திரியையும் எழுப்பி தினேசைத் தோளில் போட்டபடி வீட்டை இழுத்துச்சாத்தி விட்டு மாதா கோயிலடிக்கு வேகமாக நடக்கத் தொடங்கினாள். கடற்கரை மணலுக்குள் கால்கள் புதையப்புதைய, காயத்திரி பின்னாலே பரிதாபமாக ஓடி வந்தாள் அவளுக்கு இது புதிதில்லைத்தான். என்றாலும் காற்று அன்று அதிகமாக வீசியதால் நடப்பது சற்றுக் கடினமாக இருந்தது.

மாதா கோயிலுக்குள் ஏற்கனவே அதிகம் பேர் வந்திருந்தார்கள். செல்லோ, பீரங்கியோ, பொம்மரோ எது அடித்தாலும் அவர்களுக்கு இந்த மாதா கோயில்தான் தஞ்சம். இப்படிப் பல இரவுகளை கன்போட்டின் வருகையால் அவர்கள் மாதா கோயிலுக்குள் கழித்ததும் உண்டு.

கோயில் விறாந்தையில் ஒரு சின்ன இடம் அவர்களுக்கெனக் கிடைத்தது. ''அக்கா இதில சரியாக் குளிருதக்கா. வா கோயிலுக்க போயிருப்பம்'' காயத்திரி உலுப்பினாள். ''இல்லை நாங்கள் எல்லாம் உதுக்குள்ள இப்ப போகேலாது. அதுக்க பெரியாக்கள் தான் போகலாம்'' சொல்லி முடிப்பதற்குள், 'ஏனக்கா பொய் சொல்லுறீங்க, அங்கே என்னவிட சின்னப் பிள்ளையள் எல்லாம் நிக்கினம்' செல்வியால் எப்படி அவளுக்கு விளங்க வைப்பது எனத் தெரியவில்லை. அடைக்கலம் தேடி வந்த ஆண்டவனின் இடத்தில்கூட ஏற்றத் தாழ்வுகள் முன்னின்று தாண்டவமாடுவதை எப்படி அந்த பிஞ்சு உள்ளத்திற்கு விளங்க வைப்பது? செல்வி ஒருவாறு சமாளித்து அவர்களைத் தூங்க வைக்க முடிந்ததே ஒழிய அவளால் தூங்க முடியவில்லை. அருகிலே ஒரு அம்மா தனது மூன்று பிள்ளைகளையும் அணைத்தபடியே தூங்குவது தெரிந்தது அவளையும் அறியாது உதடுகள் 'அம்மா அம்மா' என்று அசைய அவள் இருவிழிகளும் வானத்தில் அம்மாவைத் தேடின அம்மாவின் நினைவுகள் நெஞ்சை அழுத்த, அம்மாவையும் உடன் பிறப்பையும் இழந்த அந்த துயர நிகழ்வு கண்முன்னால் தெரிந்தது.

இப்படித்தான் ஒரு மாதா கோயில் விறாந்தை. அவள் நினைவுகள் மூன்று வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் மீன்பாடும் அவர்களது சிறியகிராமத்தைச் சுற்றிசுற்றி வந்தன.

அவள் அப்பா ஒரு மீன்பிடித்தொழிலாளி, மிகவும் நாணயமானவர். சவரிமுத்து என்றால் அந்த ஊரில் எல்லோருமே நம்பி எந்தக் காரியத்தையும் ஒப்படைக்கலாம் என்று சொல்வார்கள் அவ்வளவுநேர்மையானவர். தாயும் அப்படித்தான். அன்னம்மா மிகவும் நல்லவள் தமையன் அவள் தம்பி தினேஷ், காயத்திரி இதுதான் அவள் குடும்பம். செல்வி படிப்பதில் மிகவும் ஆவலாக இருந்தாள். இந்தத் தடவை அவள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருந்ததால் அன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்தும் வீட்டு வேலைகளை காலையிலேயே முடித்துவிட்டு படித்துக்கொண்டிருந்தாள். அவள்தாய் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாலும் செல்வி படிக்கவேண்டும் என்பதற்காக வீட்டு வேலைகளை தானும் சேர்ந்து செய்து முடித்து விட்டு திண்ணையிலே படுத்திருந்தாள்.

சீறாது சிவக்காது காற்று மெல்லியதாக வீசிக்கொண்டிருந்தது. கருமேகங்கள் இடையிடையே வானத்தை அலங்கரித்துக்கொண்டிருந்தன. அலைகள் வந்து கரையை மோதும் ஓசை மட்டும் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தது. எல்லாமே வழக்கம் போலத்தான் ஆனால் ஒரு ஹெலி மட்டும் வழக்கத்துக்கு மாறாக இரைந்து கொண்டிருந்தது. இதுகூட இப்போது இந்தக் கிராமத்தில் வழக்கமாகி விட்டதால் யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை.

திடீரென்று சின்னவன் கத்தினான், ''அம்மா ஹெலி நோட்டிஸ் போடுறான்.'' வீட்டில் இருந்த எல்லோரும் வெளியே வந்து வேடிக்கை காட்டும் ஹெலியையே அண்ணாந்து பார்த்தபடி இருந்தனர். நோட்டிஸ் துண்டுகள் வெள்ளிக் கீறல்களாக வானத்தில் மின்னியபடி பறந்தன. ''மாதாவே, புதிதா என்ன பிரச்சனையோ? உண்ட பிள்ளைகளைக் காப்பாற்றும்'' எனத் தாய்மனம் எண்ணிக்கொண்டது. ஏனென்றால் அந்தக் கிராமத்தவர் ஒவ்வொருவரும் அவலங்களை வாழ்க்கையிலே வாழ்ந்து பழகியவர்கள். தலை தெறிக்க மூத்தவன் ஓடி வந்தான், ''அம்மோய், நோட்டிசைப் பாரன். வயிற்றைப்பற்றி எரியுது'' அடக்கமுடியாத ஆத்திரத்தில் கத்தினான். ''எங்கட மண்ணை விட்டு எங்கட வீட்ட விட்டு எழும்பிப்போகச் சொல்லுறதுக்கு இவங்கள் ஆரு?'' உணர்ச்சிமேலிட, இரத்தநாளங்கள் எல்லாம் புடைத்துக் கொண்டுநின்றன படபடக்கும் அவன் கைகளில் இருந்து செல்வி அமைதியாக நோட்டிசை வேண்டிப் பார்த்தாள் வெள்ளைக் காகிதத்தில் சின்னச் சின்ன எழுத்துக்கள். அவைதான் அவள் கனவுகளை கலைக்கப்போகின்றன என்று அறியாதவளாய் ''எல்லாரையும் கோயில்களிலேயும் பள்ளிக்கூடங்களிலேயும்போயிருக்கட்டாம் எங்கட கிராமத்த சுற்றிவளைக்கப்போயினமாம் சொல்லும் போதே செல்விக்கு இலேசாக நடுங்கியது அவளுக்குதன் கனவுகள் எல்லாம் மெதுவாகக் கலைய ஆரம்பிப்பது போல் இருந்தது

அந்தக் கிராமமே அல்லோலகல்லோலப்பட்டது எல்லோரும் அந்த மாதா கோயிலைத் தமது தஞ்சமாக்கிக் கொண்டார்கள் செல்வியின் குடும்பமும் அங்கேதான் இருந்தது. ஒவ்வொருவரின் மனதிலும் பல்வேறுபட்ட எண்ணங்கள் இழையோடிக் கொண்டிருந்தன செல்வியின் மனமோ ''மாதாவே அந்த அண்ணாக்களைக் காப்பாத்தும்'' என ஆயிரம் தடவைகளுக்கு மேல் சொல்லிக்கொண்டது. அவர்கள் அந்த கிராமத்துக்கு வந்து கொஞ்ச நாட்களாயினும் அந்தக் கிராம மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் பெருவாக இடம்பிடித்து விட்டார்கள். இவள் வயதுப் பையன்கள்கூட அவர்களில் இருந்தார்கள். ''பாவம் இவையளுக்கும் எவ்வளவு ஆசைகள் இருக்கும்! எல்லாவற்றையும்விட்டுவிட்டு எங்களுக்காக எவ்வளவு வேதனைகளைத் தாங்கிக்கொள்கிறார்கள். நாங்கள் மட்டும் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறம்''. அடிக்கடி இந்த எண்ணங்கள் அவள் மனதில் வந்துபோனது நினைவுகளை வாழ்க்கையிலே பிரதிபலிக்க முடியாதபடி அவள் வீட்டு நிலைமையும் அவள் இலட்சியமும் குறுக்கே நின்ற சந்தர்ப்பங்கள் ஏராளம்.

அவள்நினைவுகளை அறுப்பது போல தூரத்திலே வெடிச்சத்தங்கள் தெளிவாகக் கேட்டது. அருகிலே இருந்த அவள் அம்மா ''பிள்ளை எனக்கு வயித்துக்க வலிக்குது போல இருக்குது. இப்ப என்ன செய்யிறதோ மாதாவே'' செல்விக்கு சுருக்கென்டு யாரோ குத்துவது போல இருந்தது. ''என்னசெய்யிறது? ஆண்டவரே, என் அம்மாவைக்காப்பாத்தும் என் அம்மாவைக் காப்பாத்தும்'' அவள் அடிக்கடி வேண்டியபடி இருந்தாள் அம்மா படும் வேதனையை அவளால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவளால் கண்ணீர்விட முடிந்ததேயொழிய வேறெதையுமே செய்யமுடியவில்லை. அப்பா சைக்கிளை எடுத்து வந்து ''நான் டவுன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறன், குறுக்குப்பாதையில ஆமி வந்திருக்கமாட்டான்'' சொல்லி முடிப்பதற்குள் மூத்தவன் ''அப்பா நீங்க நில்லுங்கோ நான் அம்மாவைக் கொண்டு போறன். நானெண்டா கெதியாக் கொண்டு போயிடுவன்'' மறுக்க மறுக்க அவன் கேட்காமல் அம்மாவையும் ஏற்றிக் கொண்டு சைக்கிளை மிதித்தான். அந்தக் கிராமமே அவன் அம்மாவுக்காக அழுதது.

மூன்று நாட்கள் எப்படி கடந்ததோ தெரியவில்லை. இன ஒழிப்பின் வித்துக்கள் மனித உருவெடுத்து புரிந்த அடாவடித்தனங்களால் அந்தக்கிராமமே சின்னாபின்னமாகி சிதைந்து போய் இருந்தது. அந்த மாதா கோயில் முற்றத்தில் வெந்து கருகிப்போன மனித, மிருக உடலின் பாகங்கள் ஒரு மூலையிலே குவிக்கப் பட்டிருந்தன. இரத்தக்கறை

(7 ஆம் பக்கம் பார்க்க)

# லங்கா ஆட்சியின்....

லங்கா நீதியின்
லட்சணம் கேட்பீர்!
லங்கா ஆட்சியில்
(அ)லட்சியம் கேட்பீர்!

❋

மாதிரிக் கிராமங்கள்
தெற்கிலும் மேற்கிலும்!
அகதி முகாம்கள்
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

வீடுகள் அமைப்பு
தெற்கிலும் மேற்கிலும்!
வீடுகள் தகர்ப்பு
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

கிராமங்கள் வளர்ப்பு
தெற்கிலும் மேற்கிலும்!
கிராமங்கள் எரிப்பு
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

கல்விக்குக் கொடைகள்
தெற்கிலும் மேற்கிலும்!
கல்விக்குத் தடைகள்
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

பொருள்வள வளர்ச்சிகள்
தெற்கிலும் மேற்கிலும்!
பொருளவள அழிப்புகள்
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

தொழில்வளப் பெருக்கல்
தெற்கிலும் மேற்கிலும்!
தொழில்வள நொருக்கல்
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

மனிதர்கள் புனிதர்களாம்
தெற்கிலும மேற்கிலும்!
மனிதர்கள் புழுக்களாம்
வடக்கிலும் கிழக்கிலும்!

குளங்களும் அணைகளும்
தெற்கிலும் மேற்கிலும்!
கலங்கிறார் அனைவரும்
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

பாசத்தின் குரல்கள்
தெற்கிலும் மேற்கிலும்!
பஞ்சத்தின் குரல்கள்
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

பஞ்சணையில் வாழ்க்கை
தெற்கிலும் மேற்கிலும்!
பதுங்குகுழியில் வாழ்க்கை
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

ஆட்சிக்குத் துடிப்பு
தெற்கிலும மேற்கிலும்!
மீட்சிக்குத் துடிப்பு
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

ஆடலும் பாடலும்
தெற்கிலும் மேற்கிலும்!
ஓடலும் வாடலும்
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

அன்புப் பேச்சுகள்
தெற்கிலும் மேற்கிலும்!
குண்டு வீச்சுக்கள்
வடக்கிலும் கிழக்கிலும்!

❋

லங்காவின் [அ]நீதிகள்
இப்படிப் பலப் பல!
லங்காவின் [அ]நீதியில்
இவைகளோ மிகச் சில!

......''சரவணாஸ்''

❋ ❋ ❋

# த ஐ. பி. கே. எவ். இன் சிறிலங்கா: தெளிவற்ற இலக்கிற்கான முடிவற்ற யுத்தம்

நிலாந்தன்

எக்காளம் தெளிவற்று ஒலிக்கும்போது
எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்? 1 கொரி.14:8

மேற்படி பைபிள்வசனத்தை இந்தியாவின் முதலாவது பீல்ட் மார்ஷல் சாம் மனேக்ஷோ, திபேந்தர் சிங்கின் நூலிற்கு எழுதிய முன்னுரையில குறிப்பிட்டுள்ளார். ஐ.பி.கே.எவ். இன் ஆரம்பகாலத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங் எழுதிய த ஐ.பி.கே.எவ்.இன் சிறிலங்கா (இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படை) என்ற நூல் இவ்வாண்டு(?)வெளியிடப்பட்டுள்ளது (நூலில் வெளியிடப்பட்டகாலம் குறிப்பிடப்படவில்லை) இந்தியாவிலிருந்து திரிசூல பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட இந்நூல் இந்திய நாணய மதிப்பின்படி 225 ரூபாய்கள் விலையிடப்பட்டுள்ளது. நூலின் கவர்ச்சியற்ற முகப்பு அட்டையில் இந்தியாவிற்குக்கீழ் ஒரு சீக்கிய த ஐ.பி.கே.எவ். வீரன் இலங்கையை கையில் தூக்கி வைத்திருப்பது சித்திரிக்கப்பட்டுள்ளது.

நூலிற்குரிய முன்னுரையை பீல்ட் மார்ஷல் சாம்மானெக்ஷோ எழுதியுள்ளார்.

முன்னுரைக்கூடாக நூலினுடைய இவ் நூலின் 207 பக்கங்களிலும் கூறப்பட்டுள்ள விடயங்களின் சுருக்கத்தை முன்னுரையில் காணமுடியும். மனெக்ஷோ கேட்கிறார்: "எமது துருப்புக்கள் இலங்கையில் பெரிய இழப்புக்களைச் சந்தித்தார்கள்; ஏன்? த ஐ.பி.கே.எவ். இன் இராணுவ நடவடிக்கைகள் அடைந்திருக்க வேண்டிய வெற்றியை அடையவில்லை. ஏன்? இந்திய இராணுவம் ஒரு தொழில்முறை இராணுவம். கடந்த காலங்களில் மீசோராம் மலைகளில் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளும் உட்பட அது வெவ்வேறு யுத்த களங்களில வெவ்வேறு விதமான யுத்த நடவடிக்கைகளில் பெரிய வெற்றிகளோடு பணியாற்றியுள்ளது. அவ்வாறாயின அத்தகைய வெற்றிகளை அது ஏன் சிறிலங்காவில் பெறவில்லை?"

மேற்படி கேள்விகளிற்கான விடைகளை மனெக்ஷோ தர முயல்கிறார். அதே சமயம் இக்கேள்விக்குரிய விடையாகவே திபேந்தர் சிங்கின் நூலும் அமைந்துள்ளது.

புலிகளுடனான யுத்தத்தை திபேந்தர சிங் ஆரம்பத்திலிருந்தே தவிர்க்க முயன்றார். ஒக்டோபர் ஆறாம் தேதி (1987) ஜெனரல் சுந்தர்ஜி பலாலிக்கு வந்தார். புலிகளிற்கு எதிராகப் பலத்தைப் பிரயோகிப்பது என்ற அரசியல் முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது என்று தெரிந்தது. இவ்வசதான கடும் தெரிவைக் கையாள முயன்றால் வரப்போகும் 20 வருடங்களிற்கு த ஐ.பி.கே.எவ். கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் சிக்குப்பட நேரிடும் என்று திபேந்தர் சிங் சுந்தர்ஜியிடம் சொன்னார் அதற்கு சுந்தர்ஜி, திபேந்தர் சிங் தோல்வி மனப்பான்மையுடனிருப்பதாகக் கடிந்து கொண்டார். ஆனால், திபேந்தர்சிங் அதற்குப் பின்வருமாறு பதிலளித்தார். "நான் தோல்வி மனப்பான்மை வாதி அல்ல யதார்த்தவாதி" பிறகு சுந்தர்ஜி கொழும்பு போய் விட்டார். திபேந்தர். சிங், ஹர்கிரட் சிங்கையும் அழைத்துக் கொண்டு ஹெலிகொப்டரில் புலிகளிடம் சென்றார். யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் ஹெலிகொப்டர் இறங்கியது. விடுதலைப் புலிகளின் தலைவரை அவர்களால் சந்திக்க முடியவில்லை திரு. மாத்தையாவை அவர்கள் சந்தித்தார்கள். ஏன் புலிகள் இக்கடும் பாதையைத் தெரிவு செய்தார்கள் என்று திபேந்தர் சிங் மாத்தையாவிடம் கேட்டார், அதோடு (யுத்தத்திற்கு எதிராக) யுத்தத்தின் விளைவுகளையும், சிவர்களின் எதிர்காலம் நாசமாகப் போவது பற்றியும் குறிப்பிட்டார். அதற்கு மாத்தையா சொன்னார்:

"நாங்கள் சாகத் தயார், அவமரியாதையோடு வாழ மாட்டோம்."

பிறகு யுத்தம் தொடங்கியது. எனினும் திபேந்தர் சிங் கடைசி முயற்சியில் இறங்கினார். சென்னைக்குச் சென்று பண்ருட்டி ராமச்சந்திரனைச் சந்தித்தார். (எம் ஜி ஆர். அமெரிக்கா போகும்போது தான் இல்லாத இடத்தில் பண்ருட்டி ராமச்சந்திரனைத் தொடர்பு கொள்ளும்படி கூறியிருந்தாராம்) பண்ருட்டி ராமச்சந்திரன் திபேந்தர் சிங்கின் அபிப்பிராயங்களைத் தானும் பகிர்ந்து கொண்டார். இதே விஷயமாகத் தான் அவர் அப்போது புதுடில்லிக்குப் போவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார் ஆனால் புதுடில்லியிலிருந்து திரும்பி வந்ததும், அங்கு அவர்மீது பிரயோகிக்கப் பட்டிருக்கக்கூடிய அழுத்தங்கள் காரணமாக பண்டிருட்டி ராமச்சந்திரன் திபேந்தர் சிங்கிடம், புலிகளைக் கைப்பிடிக்குள் கொண்டுவந்தேயாகவேண்டும் என்று சிடுசிடுப்பேடு சொன்னார் (பக். 84, 85, 86) இவ்வாறாக யுத்தத்தைத் தவிர்க்கும் திபேந்தர் சிங்கின் முயற்சிகள் தோல்வியடைந்தன.

யாழ் நகரத்தைக் கைப்பற்றுவதற்கு நான்கு நாட்கள் போதும் என்று திட்டமிட்டிருந்த போதிலும், 10 நாட்கள் சண்டையின் பின்னரே யாழ் நகரம் வீழ்ச்சியடைந்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் புலிகளோடு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்படி திபேந்தர்சிங் புதுடில்லியிடம் அடிக்கடி அழுத்திக் கூறினார் ஆனால் புலிகள் மிகவும் பலவீனமடைந்துவிட்டதாக றோவும் வெளிவிவகார அமைச்சும் திட்டவட்டமாக நம்பின. எனவே புலிகளை மேலும் நெருக்குமாறு திபேந்தர் சிங்கிடம் கூறப்பட்டது. இந்த விசயத்தில் அவருடைய பரிந்துரைகள் கவனத்திற் கொள்ளப்படவில்லை. (பக். 128). காயமடைந்த துருப்புக்களைப் பார்ப்பதற்காக பிரதமர் ராஜிவ் காந்தி புனேக்கும், சென்னைக்கும் வந்தார். அப்பொழுதும் திபேந்தர்சிங்கின் அபிப்பிராயங்கள் கேட்கப்படவில்லை.

அபிப்பிராயங்களைக்கேட்ட பாதுகாப்பமைச்சர் கே. சி. பந்தும் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. (பக் 132) எனவே ஒரளவிற்குக் கலைப்படைந்தவராக [சலிப்படைந்தவராகவும்] திபேந்தர்சிங் கூறுகிறார் 'இலங்கையில் ராணுவம [ஐ பி கே. எவ்] ஏனைய நிறுவனங்களை விடவும் (புலனாய்வுத்துறை, வெளிவிவகார அமைச்சு) யதார்த்தத்துடன் நெருங்கிய தொடர்பைக்கொண்டிருந்தது. புலிகளை அடக்குவதை ஆரம்பிப்பது என்ற எண்ணம் சரியானால் இராணுவத்திற்கு அவ்வாறு அறியத்தரப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறாயின் அதற்கான யுத்ததந்திரத்தைத் திட்டமிட்டிருக்க முடியும் வேண்டிய அளவு தனது பலத்தைக் கட்டியெழுப்பியிருக்க முடியும் தான் தெரிவு செய்த நேரத்தில் தாக்குதல்களை ஆரம்பித்திருக்க முடியும் பதிலாக இராணுவம் மனோவியல் ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் பூரணமாகத் தயாராகாத நிலையில நடவடிக்கைகளிற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது நடவடிக்கைகள் ஆரம்பமானபின் ஒரு தலைப்பட்சமாகக் கூட நாங்கள் யுத்தநிறுத்தத்தை அறிவிக்கக்கூடிய பல சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் திரும்பவும் மற்றவர்களின் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் எந்த இரு பகுதியினரை(சண்டையிடாது பிரித்து வைக்க நாம் முயன்றோமோ அவர்களே கைகளை இணைத்துக்கொண்டு எமதுவெளியேற்றத்தைக் கோருவதான நிலைமை உருவாகும்வரை கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் இழுபட்டுச்சென்றன இது முரடடுத்தனமாகச்செய்யப்பட்ட அரசியல் ராஜதந்திர புத்திசாலித்தனமற்ற. தாக்கமுள்ள நீண்ட காலதிட்டங்கள் எதுவும் அறவே இல்லாததை எடுத்துக் காட்டுகிறது (பக் -170)

இந்தியாவிற்கு வெளியில் இந்தியத்துருப்புக்கள் சந்தித்த முதலாவது நகர்ப்புறச்சமராக இது அமைந்தது. இது மிசோராம் நாகலாந்து அனுபவங்களிலிருந்து வித்தியாசமானது அதோடு துருப்புக்கள் முதற்தடவையாக நவீன ஆயுதங்களும், எதிர்க்க முடியாத ஒருங்கிணைப்பும் கொண்ட படித்த, நடுத்தர வர்க்க இளைஞர்களோடு போரிட வேண்டியிருந்தது புலிகளிடம் இருந்த AK 47 ரக ரைபிள்களோடும் சகதிமிக்க தொடர்பு சாதனங்களோடும் ஒப்பிடுகையில் த ஐ.பி.கே எவ் இடமிருந்தவை பின்தங்கியவை என்று திபேந்தர் சிங் கூறுகிறார். (பக்-111,112)

மற்றய இயக்கங்களைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். புலிகளை அடையாளம் காண்பதற்குமற்றைய இயக்கங்களைச் சமயோசிதமாகப்பயன்படுத்தியதாகக் கூறும் அவர், புலிகளின் ஆதரவுடன் கடல்வழியாக யாழ்ப்பாணத்திற்கு வந்த சில இந்தியப் பத்திரிகையாளர்கள் ஐ பி கே.எவ் மற்றைய இயக்கங்களோடுசேர்ந்தியங்குவதாக எழுதினார்கள் என்றும் ஆனால் சமயோசிதமாக மற்ற இயக்கங்கள் பாவிக்கப்பட்டதே உண்மையென்றும், அவற்றோடு ஐ பி.கே. எவ் சேர்ந்தியங்கவில்லை என்றும கூறுவதோடு சீனத்தலைவர் டெங்சியாஓபிங்குனுடைய பழமொழியொன்றை தாம் இந்த இடத்தில் பின்பற்றியதாகவும் கூறுகிறார். "பூனை கறுப்போ வெள்ளையோ அது எலி பிடித்தால் சரி" என்பதே அந்தப் பழமொழி (பக்- 109) மேலும் மற்ற இயக்கங்களை 'றோ' பின்நின்று தூண்டியதும் புலிகள் ஐ.பி.கே.எவ் மீதும் இந்தியா மீதும் சந்தேகம் கொண்டதிற்குரிய காரணங்களில் ஒன்று என்று கூறுகிறார். (பக்-66)

திபேந்தர் சிங் ஐ. பி. கே. எவ். தளபதியாக கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் இருந்தார். பின் 1988 பெப்ரவரியோடு ஓய்வு பெற்றார் அவரது இடத்திற்கு லெப்டினன்ற் ஜெனரல், ஏ. சி. கல்கட் நியமிக்கப்பட்டார்.

தனது 40 வருட கால இராணுவ சேவையில் திபேந்தர்சிங் வகித்த மிக முக்கிய பதவி இது எனலாம். அவரது இராணுவ வாழ்வின் உச்சமாகவும் இதை தவர்ணிக்கலாம். அவரது வாழ் நாளில் மறக்க முடியாததும், பெருமையோடு நினைவு கூரத்தக்கதும் அவரை (இந்தியாவிற்கு வெளியிலும்) அதிகம் பிரபல்யப்படுத்தியதுமான ஒரு பதவி இது. எனவேதான் தலைமையேற்று நடத்திய ஒரு யுத்தத்தைப் பற்றி இழிவாகவோ அல்லது தோல்வியுணர்வோடோ சித்திரிக்க அவரால் முடியவில்லை. அதே சமயம் அவர் சுந்தர்ஜிடம்கூறியது போல அது ஒரு முடிவற்ற இரக்கமற்ற யுத்தம் என்ற யதார்த்தம் அவரைஎப்பொழுதும் உறுத்தியது. எனவே இந்த முரணை, அதாவது முடிவற்ற யுத்தம் என்று தெரிந்து கொண்டும் ஒரு யுத்தத்தை நடத்திய முரணை நூலில் பல இடங்களிக் காண முடிகிறது. இந்த யுத்தத்தை நடாத்தியதற்காகவே அவரிற்கு ஷிரோமணி விருது வழங்கப்பட்டது. விருதைக்குறித்து அவர் பெருமை கொள்ளும போது அங்கு குற்றவுணர்வு எதுவும் காணப்படவில்லை.

தன்னுடைய உயர் தளபதி சுந்தர்ஜி கூறுவதுபோல இது ஒரு அரசியல் இராணுவ நடவடிக்கை என்றே திபேந்தர் சிங் கூறுகிறார். ஆனால் உடன்படிக்கையின்பின்னரான நிலைமைகளைப் பற்றிக் கூறும் போதெல்லாம் பெரும்பாலும் சம்பவங்கள்இராணுவநோக்கு நிலையில் இருந்தே கூறப்படுகின்றன. பிரச்சினைகளும்சம்பவங்களும்அவற்றிற்கேயுரிய அரசியல் பின்புலத்தில் வைத்து முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. சொல்லப்படவுமில்லை. ஆனாலும், உடன்படிக்கை ஒரு முடிவற்ற யுத்தமாக உருவெடுத்த சூழலிலும் யாழ்ப்பாணத்துக்கான சமரின் போதும் முக்கிய பொறுப்பிலிருந்தவர் என்ற வகையில் திபேந்தர் சிங்கின் குறிப்புகளும் கணிப்பீடுகளும் ஆவணப் பெறுமதிமிக்கவை.

ஒரு சிறிய தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் கூட்டத்தின் தலைவிதியைத் தீர்மானிப்பதாகக் கூறிக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியல் இராணுவ நடவடிக்கை ஒன்றில், அரசியல் முடிவுகளுக்கும் இராணுவ நடவடிக்கைகளிற்கும், இடையில் எப்பொழுதுமே ஒத்திசைவு காணப்படவில்லை என்பதே இந்நூலிற்கூடாகப் பெறப்படும் பிரதான செய்தியாகும். பின் நிகழ்ந்த எல்லாத் தவறுகளிற்குமுரிய வேர் இங்குதான் காணப்படுகிறது. யுத்தகள யதார்த்தம் பற்றிய தளபதிகளின் ஆலோசனைகளை ராஜதந்திரிகளோ அரசியல் வாதிகளோ செவிமடுக்கத் தயாராக இருக்கவில்லை. தளபதிகள் வெறுமனே கட்டளைகளை நிறைவேற்றும் எந்திரங்களைபோல செயற்பட்டிருக்கிறார்கள். அரசியல்வாதிகளினதும் ராஜதந்திரிகளினதும் கற்பனைகளிற்காக அல்லது பழிவாங்கவேண்டும் என்றபிடிவாதத்திற்காக ஐ பி கே. எவ். இலக்கின்றிப் போராடியுள்ளது. இந்தியப்பேரரசின்இராஜதந்திர எந்திரத்திற்கும் இராணுவ எந்திரத்திற்கும் இடையில இருந்த (தவிர்த்திருக்கக் கூடிய) இடைவெளி காரணமாக தமிழர்கள் (மேலதிகமாகக் குருதிவார்கள் மெய்யாகவே யார்யாரோ விட்ட தவறுகளுக்காக தமிழர்கள்தான் தொடர்ந்தும் குருதி சிந்தி வந்திருக்கிறார்கள்)

## வைரவரிகள்

கலைஞனுக்கும் விஞ்ஞானிக்கும்
பலவிதத்திலும் ஒற்றுமை உண்டு.
அவர்கள் அளவு கடந்து
சுதந்திரமானவர்கள். அவர் —
களுக்கு படைப்புத்திறன் உண்டு;
ஒன்றை ஆராய்ந்து தெரிந்து -
கொள்ள வேண்டுமென்ற, தணிக்க
முடியாத தேவை இருவருக்கும்
இருக்கிறது. இருப்பினும் கலைஞன்
ஒரு அடி முன்னால் போகிறான்,
மனிதகுலத்தைப் புரிந்து கொள்ள
வேண்டிய தேவையும் அதை மனித
குலத்திற்கே விளக்க வேண்டிய
அவசியமும் அவனுக்கு இருக்கிறது.

பேர்ல். எஸ். பக்

# இது ஒரு தனிச் சம்பவமல்ல...

**24-07-83**

மாதகல் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவ வண்டி மானிப்பாயை நோக்கிச் சென்று கொண்டிருந்தது குறைந்த குண்டுகளில் கூடுதலான தமிழர்களை கொல்வதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் அதில் பயணம் செய்து கொண்டிருந்த இராணுவத்தினர். அவர்களது எதிர்பார்ப்புக்கு ஏற்றாற் போல் முன்னே ஒரு இ.போ.ச. பஸ் சென்று கொண்டிருந்தது. உற்றுக் கவனித்தனர் அவர்கள். அதில் பிரயாணம் செய்தவர்களில் அநேகர் இளவயதுக்காரர்கள்- மாணவ, மாணவிகள். இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்பட்டது அவர்களுக்கு இராணுவ வண்டி பஸ்ஸை மறித்தது.

பச்சை உடை அணிந்தவர்களிடம் கருணையினை எதிர்பார்ப்பது வீண் என்பதைத் தெரியாதவர்களல்ல அந்த பஸ்ஸில் சென்ற பிரயாணிகள். ஆனாலும் அந்த நேரத்தில் வேறு வழியில்லை. அழுதார்கள் - கையெடுத்துக் கும்பிட்டார்கள். ஆனாலும்...; பட், பட், பட்.... ஒவ்வொருவராகச் சூடுபட்டுக் கீழே விழுந்தனர். அதே வேளை பஸ்ஸின் ஆசனத்துக்குக் கீழே ஒழிந்து கொண்டாள் ஒரு மாணவி. சூடுபட்டு அவள் மீது விழுந்தவர்களின் இரத்தத்தினால் அவள் குளிப்பாட்டப்பட்டாள். நடந்த நிகழ்ச்சிகளின் அதிர்ச்சியிலிருந்து மீள அவளுக்குப் பல நிமிடங்கள் சென்றன.

கடந்த இரவு திருநெல்வேலியில் புலிகளின் போர்த்திறனுக்குப் பலியான தமது சகாக்களுக்காக அப்பாவிப்பொது மக்களைச் சுட்டுக் கொன்ற திருப்தியோடு இராணுவத்தினர் சென்று விட்டனர்.

இராணுவத்தினர் அங்கிருந்து சென்று விட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின் அவள் தனது வீட்டிற்குச் சென்றாள். கீரிமலைப் பகுதியிலுள்ள வலித்தூண்டல் என்னும் ஊரில்தான் அவளது வீடு அமைந்திருந்தது.

அவள் பெயர் நவஜெகா. ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான அகஸ்தியர் எனப்படும் அகஸ்ரின் என்பவரது மகள் தான் அவள். நடந்த சம்பவங்களைப் பீதியுடன் தந்தைக்குச் சொன்னாள். இச்சம்பவத்திற்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எழுத்தாளர் அகஸ்தியர் காங்கேசன்துறையிலிருந்த பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யப் புறப்பட்டார்- மகள் நவஜெகாவையும் கூட்டிக் கொண்டு.

எழுத்தாளர் அகஸ்தியர் அவர்கள் சிறிலங்கா இராணுவத்தில் கடமையாற்றியவர். அந்தவகையில் அவரால் சரளமாகச் சிங்களம் பேசமுடியும். இதைவிட இவர் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியில் நம்பிக்கை கொண்ட நல்லாதரவாளர். ''ஒரு காலத்தில் தோசை வடை அப்பிட்ட எப்பா...'' என்று ஊர்வலம் போனவர்கள் 1972-ம் ஆண்டு தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் அரசியல் அமைப்பிற்குக்கையை உயர்த்தி ஆதரவு தெரிவித்தவர்கள்; தமிழ் மாணவர்களின் உயர்கல்வி உரிமையைப் பறிப்பதற்கும் துணை போனவர்கள்.. இப்படியாக மாஸ்க்கோ சார்பு இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு நீண்ட தமிழின விரோத வரலாறு உண்டென்றாலும் ''சந்தையாவும் கருப்பண்டாவும் கைகோர்த்துக் கொண்டு கள்ளுக்குடிக்கும் பட்டாளிவர்க்க ஒற்றுமையை உண்டாக்கும் சக்தி அக்கட்சிக்கு உண்டு' என மனமார நம்பியவர். இதைவிட அந்த அரசியலமைப்புக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துத் தமது பதவியை ராஜினாமா செய்த தந்தை செல்வா காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழீழ இலட்சியத்தை முன்வைத்து இடைத்தேர்தலில் போட்டியிட்ட போது அவருக்கெதிராகப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் திரு. வ. பொன்னம்பலத்துக்காகத் தீவிரமாக உழைத்தவர்.

ஆகவே இவர் சிறிலங்கா அரசிடம் நீதியை எதிர்பார்த்ததில் வியப்பில்லை. ஆனால் படித்த புத்தகங்களை விட அனுபவமே சிறந்த ஆசான்

**அருணா**

என்பதை புரியவைத்தனர் சிறிலங்கா காவல் துறையினர் சீரியசாக இவர் சொல்லிக் கொண்டிருந்த விடயங்களைப் பொலிசார் தாமாசாககேட்டுக் கொண்டிருந்தனர். ஆனாலும் பொறுத்துக்கொண்டு விசயத்தைப் பொலிசாருக்கு விளக்கினார் அகஸ்தியர்.

இவரது கண்ணெதிரிலேயே அவர்கள் பலாலியிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினருடன் தொலைபேசியில் பேசினர் அப்பேச்சிலிருந்து அவ்விடயத்தை அவர்கள் என்னமாதிரி கையாளப் போகிறார்கள் என்பது அவருக்குப்புரிந்துவிட்டது 'நாங்கள் மேலிடத்திற்கு அறிவித்திருக்கிறோம். நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று வழியனுப்பி வைத்தனர் பொலிஸ்காரர். நடைபெற இருக்கும் அனர்த்தம் மனக்கண்ணில் தெரிய மகளுடன் அங்கிருந்து வெளியேறினார் அவர்.

போகும்போதே அவதானித்தார் இராணுவ 'ட்றக்'ஒன்று தமது கிராமப் பக்கமாகச் செல்கிறதென்பதை, இதற்கு மேலும் தாமதிக்க விரும்பவில்லை.அவசர அவசரமாகத் தமது வீட்டிற்கு விரைந்து சென்ற அவர் பின்வேலியால் தமது குடும்பத்தினருடன் வெளியேறிவிட்டார் அருகம் பாளை கூவில் பகுதிப் பனை மரங்கள் அவரை உருமறைப்புச் செய்து கைகொடுத்தன

எப்படியோ, அவரது வீட்டைக் கண்டு பிடித்த சிறிலங்கா ராணுவத்தினர் தமது கையில் அகஸ்தியர் அகப்படாது போன ஆத்திரத்தை வீட்டை உடைத்துத் தீர்த்தனர் பெறுமதிமிக்க வீட்டுப் பொருட்களையும் அவரது நீண்டகாலத் தேடலில் சேகரிக்கப்பட்ட அரிய பல நூல்களையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

அங்கு வந்த இராணுவத்தினர்களில் யாரோ ஒருவன் யாழ். நூல்நிலையத்தை அழித்தவனாக இருக்கவேண்டும் அவன் தனது பங்கிற்கு அகஸ்தியர் வீட்டிலிருந்த பெறுமதிமிக்க புத்தகங்களை சேதமாக்கியிருந்தான்.

சிறிலங்கா அரசிடம் நீதியை எதிர்பார்ப்பவர்களுக்கு இது தான் பாடம் என சிறிலங்கா இராணுவத்தினர் உணர்த்தினர்.

எப்படியோ அவர்கள் கையில் அகப்படாததால் எழுத்தாளர் அகஸ்தியர் அவர்கள் தப்பிவிட்டார்.

★ ★ ★

குழந்தை பிறக்கும்போது
இறக்கை உள்ள
தேவதையாகப் பிறக்கின்றது.
காலம் வளர வளர
இறக்கை குறைந்து
விடுகிறது.

- பிரெஞ்சு பழஞ்சொல்

★ ★ ★

கூட்டுறவு என்பதை ஐந்து எழுத்துக்களில்தான் எழுத வேண்டுமென்பதில்லை இரண்டே எழுத்துக்களில் எழுதலாம் 'நாம்'

## பெயர் மாற்றம்

இராமநாதபுரம் 5226-ம் யூனிற்றில் வசிக்கும் பொன்னம்பலம் நிதியபூபதி ஆகிய நான் 22 - 06 - 1992 இல் இருந்து எனது பெயரை பொன்னம்பலம் நிதியழகனாக மாற்றியுள்ளேன் இது தான் எனது பெயர் கடிதத் தொடர்பே வேறு எந்தவித தொடர்புக்கும் இது தான் எனது ஒப்பம்.

இப்படிக்கு.
பொ. நிதியழகன்

( சி/ 4596 )

# விழுதுகள்

M-16 உடன் தாக்குதல் நடாத்தினாயாம். இப்படியெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் உனது சாதனைகளைப் பற்றி எல்லோரும் எனக்கு வந்து சொல்லுவார்கள் மட்டக்களப்பு நகரத்தினுள் உனக்காக நடந்த முற்றுகைகள்தான் எத்தனை?

இந்திய இராணுவம் வந்த பின்னர் உனது பெயர் மட்டக்களப்புக்கு வெளியிலும்பிரபலமாகியது. அன்னையர் முன்னணியை ஸ்தாபித்ததும் உண்ணாவிரத நிகழ்ச்சியை ஒழுங்கு படுத்தியதும் அஞ்சாத மக்கள் கூட்டம் புலிகளின் பின்னால் இருக்கின்றது என்பதை உலகிற்கு புலப்படுத்தியது. என்ன செய்வது என்று புரியாமல் திண்டாடும் நிலையை இந்தியப் படையினருக்கு ஏற்படுத்தினாய். உண்ணாவிரதத்தை குழப்ப முயன்று தோற்றுப் போனது இந்தியப் படை. ''பாரதப் போர் 18 நாட்கள்-பாரதம் தொடுத்த போர் எத்தனை நாட்கள்?'' என்ற கேள்வியை மட்டக்களப்பு நகர் முழுக்க ஒட்டினாய். மட்டக்களப்புக்குள் புலிகள் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை அடிக்கடி உணர்த்திக்கொண்டிருந்த போராளி நீ தான் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். மேஜர் ஜெயராம் அவனை எனக்கும் தெரியும் இந்திய இராணுவத்திடம் நான் கைதியாக இருந்தபோது அவனது திமிர் பேச்சுக்களை கேட்க நேர்ந்தது. உலகத்திலேயே தலை சிறந்த அறிவாளி தானே என்ற எண்ணம் அவனுக்கு இந்தியப் படை உன்னைத்தேடிச் சல்லடை போட்டு முகாம் திரும்பியவுடன் அவர்களுடன் நீ தொலை பேசியில் பேசுவாயாம். ''என்ன பிரான்சிஸ் உங்கட ஆக்களெல்லாம் பக்கத்தில தான் இருக்கிறாங்க நாங்க எப்ப சந்திக்கிறது?'' என்று கேட்ட போது ''அது கஸ்டம். நம்மட கழுத்தில் சயனைட் இருக்குதே'' என்று பதிலளித்தாயாம். ''ஏன் உங்க வாழ்க்கையை பழுதாக்குறீங்க?'' என்றுகேட்பதற்கு ''நானா நீங்களா'' என்று பதிலளித்தாயாம்.


மேஜர் ஜெயராமுக்கு சொன்னதை நீ செய்து காட்டினாய். உனது சொந்த ஊரவனே உன்னைக் காட்டிக் கொடுத்தான். உன்னை சுற்றி வளைத்த இந்தியப் படையினரிடமிருந்து நீ தப்ப முடியவில்லை ஏற்கனவே நடந்த முற்றுகையில் தப்பி ஓடும் போது ஒரு கண்ணாடி உனது காலை வெட்டியிருந்தது. அதன் காயம் உனது வேகத்தை மட்டுப் படுத்தியது அப்போதும் கூட நீ அவர்களின் ஆயுதத்தைப் பறித்துக் கொண்டு தான் ஓடினாய். ஒரேயொரு வெடி தான் உனக்கு அதுவும் காலில். நீ சயனைட்டை உட்கொண்டாய். ''நம்மட கழுத்தில சயனைட் இருக்குதே'' என்ற உனது வரிகள் உலகமெங்கும் எதிரொலித்தது.

B. B. C யின் அன்றைய தமிழ்ச்செய்தியிலும் செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்திலும் உன்னைப் பற்றிய குறிப்புக்களே கூடியளவு நேரத்தைப் பிடித்தன. உனது பணியின் முக்கியத்துவத்தை அன்றுதான்உலகம்அறிந்துகொண்டது. 'பிரான்சிஸின் மரணம் கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரசியலில்பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்'' என்று B. B. C குறிப்பிடுமளவுக்கு உனது வரலாறு அமைந்திருந்தது.

பிரான்சிஸ்! இன்று வரலாறு மாறி விட்டது. வவனியாவில் எந்த புளொட்காரரை காட்டிக் கொடுத்ததற்காக தர்மே என்ற சிங்களவனைச் சுட்டோமோ அதே வவனியாவில் அதே புளொட் இயக்கம் இன்று முழு தமிழ் இனத்தையுமே காட்டிக் கொடுக்கிறது. பல தர்மேக்கள் சிறிசேனாக்களின் எடுபிடிகளாகி விட்டனர் அவர்கள். பார்த்தனை சுட்டதற்காக களுவாஞ்சிக்குடி காவல் நிலையம் மீது தாக்குதல் நடத்துவோம் என்றாய். அன்று நாம் களுவாஞ்சிக்குடியை கைப்பற்றாவிட்டாலும், இளைய தலை முறையினர் கைப்பற்றிக் காட்டிவிட்டனர். இன்று அதே களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறீலங்கா பொலிசாருடன் இணைந்து புளொட்சிறிலங்காவின்சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப்போகிறதாம் ஆனாலும் நாம் அன்று செய்தது சரியே தான் இனியும் செய்யப்போவது சரியைத்தான்.

-கரும்பறவை

## 3-ம் வருட நினைவஞ்சலி



## மேஜர் மாறன்

(சின்னத்துரை சுகுமாரன்)

மைந்தனாய் மாவீரனாய்

23.06.1960 26.06.1989

அன்னை பூமியை நேசித்ததால்
ஈழத் தமிழரின் இதயங்களில்
வேரோடி விட்ட விருட்சமிவன்
தன்னை அழித்தேனும் தாயக விடியலை
எழுதிட என்றே எழுந்த வேங்கை — இவன்
வித்தாக விழுந்து எங்களின் சொத்து ஆனான்
மண்ணை விடுவித்து மானுட மேன்மை
வையம் கண்டு பூரிக்க வென்றே
தன்னுயிர் தந்த இவனின் பாதங்கள்
எங்களுக்கோ கலங்கரை விளக்கங்கள்.

சரசாலை, பாசமுடன்,
சாவகச்சேரி அப்பா, அம்மா, தங்கைமார்,
(2710) தம்பி, உறவினர்கள், நண்பர்கள்.

# பிரேமதாசா தனது முகமூடியை கிழித்தார் பேரினவாதத்திற்கு தலைமை ஏற்கின்றார்

கடந்த 15 ஆம் திகதி தமிழரின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவை அவரது செயலகத்தில் சந்திக்கச் சென்ற தமிழ் குழுவினர் அவமதிக்கப்பட்டதாக அக்குழுவில் சென்ற அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்தார். ஏனைய தமிழ்குழுக்களின் பிரதிநிதிகள் வெளிப்படையாக திரு. குமார் பொன்னம்பலம் போல் தெரிவிக்காது விடினும் சில முணுமுணுப்புக்கள் கேட்கத் தவறவில்லை.

ஆனால் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுவினருக்கு அவமதிப்பு ஓர்முக்கிய பிரச்சினையாகஇல்லாவிட்டாலும், திரு. பிரேமதாசா ''வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்பதில் உண்டு. அது வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கின்றது.'' எனக் கூறியமை அவர்களுக்கு பேரிடியாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினை குறித்துதீவிரமாக ஆராய முற்பட்டிருந்த இவ் வேளையில் சிறிலங்கா ஜனாதிபதியின் இவ் அறிவிப்பானது மிகுந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததும் இனப்பிரச்சினையில் மேலும் பல பரிமாணங்களை தோற்றுவிக்க கூடியதாகவும் உள்ளது.

## சமாதான தீர்விற்கு இடமில்லை

சிறிலங்கா ஜனாதிபதியின் இவ் அறிவிப்பானது தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சிங்கள அரசாங்கம் சமாதானத்தீர்வொன்றை விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றது. விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய குழுக்களுடன் இணைந்து அரசியல் தீர்வொன்றைக் காணப்போவதாக எந்தளவிற்கு - அது சாத்தியப்படும் என்பது ஒருபுறம் - கூறிவந்த பிரேமதாசா அரசாங்கம், திடீரென தமிழ்க்குழுக்களையும் வீசி எறிந்துவிட்டு சமாதானத்திற்கானதும், அரசியல் தீர்விற்கான வழிமுறைகளை திடீரென மூடியது ஏன்?

## தமிழ்க்குழுக்களுக்கு அரசியலில் பங்கில்லை

சிறிலங்கா அரசாங்கமும் சரி, இராணுவமும் சரி, தம்முடன் இணைந்து நிற்கும் தமிழ்க்குழுக்களை ஓர் அரசியல் நோக்கத்திற்காகப் போராடும் சக்தியாக எப்பொழுதும் பார்க்கவில்லை. தமிழ் மக்களையும், விடுதலைப் புலிகளையும் அழித்தொழிக்கப் பயன்படும் சக்தியாகவே பயன்படுத்தினர். இதற்கு எடுத்துக்காட்டாக அரசியல் பக்கமே சிந்திக்காத ஈ.பி.டி.பி குழுவினருக்கு சிறிலங்கா அரசாங்கம் முதன்மை வழங்கி வருகின்றது. அரசியல் அபிலாசைகள் கொண்ட அதை வெளிப்படுத்துகின்ற குழுக்களை சிறிலங்கா அரசாங்கம் எப்பொழுதும் நம்பிக்கையுடன் பார்க்கவேயில்லை.

இந்நிலையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பகுதிகளில் கூட இத் தமிழ்க்குழுக்களை அரசியல் வேலைகளை செய்வதற்கு சிங்கள அரசாங்கம் அனுமதிக்கவில்லை. தமிழ்க் குழுக்கள் எப்பொழுதும் தமது எடுபிடிகளாக, காட்டிக்கொடுப்பவர்களாக இருக்கவேண்டும்என்றே எதிர்பார்க்கின்றது.

அரசாங்கத்தின், இவ் எண்ணத்தை நிறைவேற்றுபவையாக சிறிலங்கா இராணுவமும் புலனாய்வுத்துறையினரும் செயற்பட்டு வருகின்றனர். இது கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு நன்கு தெரிகின்ற போதும், அவர்கள் அது குறித்து பெரிதாக அலட்டிக் கொள்வதாகவோ, அன்றி கவலைப்படுவதாக இல்லை. ஆனால், பேச்சளவில் வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்தும் பேச வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர். வடக்கு - கிழக்கு இணைப்புப்பேச்சை அவர்கள் தவிர்க்கும் பட்சத்தில் அவர்களின் அரசியல் எதிர்காலமும் சூன்யமானதாக போய்விடும் என்பதை உணர்ந்துள்ளனர்.

## தமிழ் தேசியத்தை முற்றாக அழிக்கும் திட்டம்

ஆனால், பேச்சளவிலேனும், தமிழ் தேசியவாதம் பற்றிப் பேசும் குழுக்களை சிங்கள ஆட்சியாளர்கள் அங்கீகரிக்கத் தயாராக இல்லை. சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டத்தின் படி புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்கிய பின்னர் ஏனைய தமிழ்க் குழுக்கள் தானும் வடக்கு கிழக்கு இணைப்பு, தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவது மீண்டும் ஏதோ ஒருவடிவத்தில் தமிழ்த் தேசியவாதத்திற்குப் புத்துயிர்ப்பு அளிப்பதாக அமையும் என சிங்கள அரசாங்கம் கருதுகிறது.

அண்மையில், சிங்களப் பாதுகாப்பு முன்னணி ''பயங்கரவாதத்தை முறியடிக்கத் தேவையான ஆலோசனை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளதா''? என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''வடக்குகிழக்கு மாகாணம் தமக்குப் பாரம்பரிய ரீதியில் சொந்தம் எனக் கூறியுள்ளமை விடுதலைப் புலிகளால் மட்டுமல்ல, ஏனைய தமிழ் அரசியற் கட்சிகளினாலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆகையினால், இக் கட்சிகள் அனைத்தும் விளங்கிக் கொள்வதற்காக தெளிவாகவும் அவதானத்துடனும் கூறவேண்டியுள்ளது. யாதெனில், சிங்கள மக்கள் இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதாகும்'' எனத் தெரிவிக்கப்பட்டது.

அதாவது சிங்களப்பேரினவாத சக்திகள் - அரசாங்கம் உட்பட வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதை எவரும் பேசக்கூடாது என்றே எதிர்பார்க்கின்றன. இந்நிலையிலே யே கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் தற்பொழுது பேச்சளவில் கூறிக்கொள்ளும் வடக்கு கிழக்கு இணைப்பு என்பதையும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை இதே வேளை வடக்கு கிழக்குஇணைப்பு பற்றியபேச்சு இன்றி தமது அரசியல் எதிர்காலத்தைத் தமிழ்க் குழுக்கள் தள்ள முடியாது என்பதையும், இவர்களை பேசினாலும் தமக்கு எதுவிதபாதிப்பையும் ஏற்படுத்தி விடப்போவதில்லை என்பதை சிங்கள ஆட்சியாளர்கள் நன்கு உணர்ந்துமுள்ளனர். ஆனால், இவர்களின் அச்சம் தமிழ் குழுக்கள் தமிழர் தேசியத்தை பேச்சளவில் வற்புறுத்தி வரினும் மீண்டும் ஒரு முறை தமிழர் தேசிய எழுச்சி இடம்பெற்று விடும் என்பதே ஆகும் இதன் காரணமாகவே தமிழர் தேசியம் என்றபேச்சே எழக்கூடாது என இப்பேரினவாத சக்திகள் எதிர்பார்க்கின்றன.

## வளர்ந்து வரும் இராணுவம்

இவ்வாறாக பேரினவாதிகளின் நிலை ஒருபுறம் இருக்க தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரேவழி என்ற ரீதியில் இராணுவம் நீண்டதொரு திட்டத்தின் அடிப்படையில் வளர்ந்து வந்துள்ளது இராணுவத்தலைமையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும், என்ற உணர்வு சிறிது தலைதூக்கியபோது அத்தலைமையை ஓரங்கட்டி விட்டு இராணுவத் தீர்விற்கேற்ற ரீதியில் இராணுவத்தில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ள கூடிய அளவிற்கு இராணுவத் தீர்வு குறித்துச் செயற்படுபவர்களின் கை ஓங்கியது அத்தோடு இராணுவம் அரசாங்கம் வழங்கிய கால அவகாசத்தை இராணுவ விஸ்தரிப்பிற்கும் விரிவாக்கத்திற்கும்பயன்படுத்திக்கொண்டது.

மேலும் தென்னிலங்கை அரசியலிலும் இராணுவத்தின் கை ஓங்கியது இராணுவம் அரசாங்கத்தின் பிரதான ஓர் அம்சமாகியது. இராணுவத்தைப் புறந்தள்ளிவிட்டு அரசாங்கம் நடத்த முடியாத நிலை உருவாகியது. கொண்டமானின் தீர்வுக கிட்டத்துடன் மீண்டும் கிளப்பப்பட்ட பேரினவாதமும் அரசியல் நெருக்கடியும் தீவிர பௌத்த பேரின வாதிகளின் கைஓங்கத் தொடங்கியமையும் இராணுவத்தினருக்கு உற்சாகமூட்டியது இராணுவத்தினருக்கும் தீவிர பேரினவாதிகளுக்கும் இடையில் உறவுகளும் வளர்ந்தன.

இந்நிலையில், இனப்பிரச்சினை தீர்விற்கு வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது சிங்கள பேரினவாத சக்திகளால் அங்கீகரிக்க முடியாத ஒன்றாகியது இனப்பிரச்சினை தீர்விற்கு தீர்வுத்திட்டத்தைத் தயாரிக்கவென உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சிங்கள கட்சிகள் ஒன்றுதானும், வடக்கு - கிழக்கு இணைப்பின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு ஆலோசனையை முன்வைக்கவில்லை.

இதேவேளை, பெரிய சிங்களக்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்காததோடு, பெரும்பாலும் வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றிக் கருத்தும் வெளியிடாமல் இருந்து வந்தன இவ்வாறான ஓர் நிலைப்பாட்டை இக்கட்சிகள் எடுப்பதற்குக் காரணமாக இருந்தமை சிறுபான்மை மக்களிடம் இருந்த வாக்குகளே ஆகும் அடுத்த வருட ஆரம்பத்தில் வரவுள்ள மாகாண சபைத் தேர்தல், பின்னர் வரவுள்ள பாராளுமன்றத் தேர்தல், அதற்கடுத்த வருடம் வரவுள்ள ஜனாதிபதித் தேர்தல் இவற்றிற்கு சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறுவது எவ்வாறு என்ற குழப்பமேயாகும்.

## சிங்களவர் தலைவனாக பிரேமதாசா

ஆனால் நாட்டின் அரசியல் சூழ்நிலை சிறுபான்மையின் வாக்குகளைப் பெறுவதற்கு எந்தளவிற்கு சாதகமாக அமையும் என்ற கேள்வியும் இருந்தது. இந்நிலையில், பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு கிழக்கு இணைப்பை நிராகரிப்பதன் மூலம் சிறுபான்மையினர் குறிப்பாக இலங்கைத் தமிழரின் வாக்குகள் இழப்பது உறுதிப்படுவது தவிர்க்க முடியாது என்ற நிலையில் தானே முந்திக்கொண்டு வடக்கு - கிழக்கு இணைப்பை நிராகரிப்பதன் மூலம் பேரினவாதிகளின் ஆதரவையும், இராணுவத்தினரின் ஆதரவையும் பெறுவதற்குத் திரு. பிரேமதாசா முந்திக் கொண்டுள்ளார். அதாவது, வடக்கு - கிழக்கு இணைப்பின்றி சிறுபான்மையினரின் வாக்கு கிடையாது என்ற நிலையில், வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு எதிரான நிலைப்பாட்டின் மூலம் சிங்கள பேரினவாதிகளையும், அதன் மூலம் சிங்களமக்களையும் திருப்திப்படுத்த திரு. பிரேமதாசா முயல்வதை மேற்கொண்டுள்ளார். அதே வேளை, இராணுவத்தினரிடம் தமது விருப்பத்திற்கேற்ப இனப்பிரச்சினையைக் கையாள அனுமதிஅளித்துள்ளார்.

இதேவேளை திரு. பிரேமதாசா பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்வுக்கு முன் வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து தமது முடிவை வெளியிட்டமை பிரேமதாசா அரசாங்கம் இனப்பிரச்சனைக்கு ஓர் அரசியல் தீர்வை எட்டிவிடும் எனக் கனவு கண்டு கொண்டிருந்த தமிழ்க் குழுக்களின் கனவுகள் கலைந்தன. அத்தோடு, திரு. பிரேமதாசா இதுவரை தன்னை இலங்கைக்கான ஒரு தனித்தலைவராகக் காட்ட முற்பட்ட போலியான ஒரு நிலைபாட்டை உடைத்தெறிந்துள்ளார். அதாவது தனது முகத்திரையை தானே கிழித்தெறிந்துள்ளார் முன்னைய சிங்களத் தலைவர்கள் வரிசையில் தன்னையும் நேரடியாக இணைத்துக்கொண்டார்

> ''வடக்கு கிழக்கு மாகாணம் தமக்கு பாரம்பரிய ரீதியில் சொந்தம் எனக் கூறியுள்ளமை புலிகளால் மட்டுமல்லாது ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளாலும் கூறப்பட்டுள்ளது. ஆகையால் இக் கட்சிகள் அனைத்தும் விளங்கிக்கொள்வதற்காகத் தெளிவாகவும் அவதானத்துடனும் கூறவேண்டியுள்ளது யாதெனில் சிங்கள மக்கள் இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதாகும்.''

> வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைப்பதை ஐ.தே.க. எதிர்ப்பதாக அறிவித்ததின் மூலம் திரு. பிரேமதாசா தன்னை பௌத்த பேரினவாதத்தின் தலைவராக வெளிப்படையாக பிரகடனப்படுத்தியுள்ளார். இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை பிரேமதாசா ஏற்படுத்துவார் எனக் கனவு கண்ட பலரது கனவை அவர் கலைத்துள்ளார்.

- ஜெயராஜ் -

## அவலங்கள்

கள்கூட இன்னும் சரியாகக் காயவில்லை. அந்த மாதா கோயிலில் மயான அமைதிநிலவியது. இடையிடையே பூட்ஸ் காலடிகளின் ஓசை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது

செல்வியின் குடும்பத்தைப் போல எத்தனையோ குடும்பங்கள் தங்களிற் பலரை இழந்திருந்தனர். இப்படி எத்தனையோ அம்மாக்களை. அப்பாக்களை. சகோதரர்களை இழந்து அகதிகளாக அலைந்தவர்களுக்கு மணலாறுக் காடு தான் பெருந் தஞ்சமாகியது. மணலாறிலும் இராணுவ முஸ்தீபுகள் ஆரம்பமாகியதால் அவர்கள் மீண்டும் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து இந்தக் கிராமத்தில் குடியேறினார்கள். செல்வியின் குடும்பம் அம்மாவை இழந்த அன்றிலிருந்து இன்றுவரை அவள் தான் அக்குடும்பத்துக்கு தாய் சகோதரம் எல்லாமே.

அம்மாவின் நினைவுகளுடன் தூங்கிப்போன அவளை தினேஸ் மெதுவாகத் தட்டினான். ''அக்கா எழும்புங்கோ விடிஞ்சுவிட்டுது வீட்ட போவோம்''. மெதுவாக எழுந்தவள் காயத்திரியையும் எழுப்பிக்கொண்டு வீட்டுக்குவிரைந்தாள்.

காதுக்குள்பூட்ஸ் கால்களின் ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. வீட்டுத் திண்ணையில் சவரிமுத்து சாய்ந்து கிடந்தார். ''இங்க ஐயாவ'' என்றபடி தினேஷ் ஓடிச்சென்று தந்தையைக் கட்டிக் கொண்டான். ஐயா, இனி நீங்கள் கடலுக்குப் போக வேண்டாம். இப்படி ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைக்க வேண்டாம். நீங்களும் இல்லாத வாழ்க்கையை நினைத்துக்கூடப் பார்க்க இயலாது. சொல்லிவிட்டு செல்வி குழந்தையைப் போல விம்மி விம்மி அழுதாள். அவளை சமாதானப்படுத்துவது சவரிமுத்துவுக்குப் பெரிய பாடாகிப் போய் விட்டது. ஒரே முடிவாக நிமிர்ந்தவள் அவர்கள் குடும்பத்துக்கு ஒரே சொத்தாக இருந்த தனது சங்கிலியையும் தோட்டையும் கழற்றி ''ஐயா இந்தாங்கோ இதை வைச்சு ஒரு சின்னக் கடையைப் போடுங்கோ. கடலுக்குஇனி போக வேண்டாம். ''அறுதியாகக் கூறினாள். சவரிமுத்து வாயடைத்து நிற்க, நிம்மதியில்லாத எங்கட வாழ்க்கை இப்படி இருக்கேக்க ஏன் எனக்கு சங்கிலியும் தோடும்'' சொல்லி பதிலுக்குக் காத்திராமல் வீட்டுக்குள் நுழைந்தவளுக்கு ஏதோ ஒரு புதுத்தெம்பு

காதுக்குள் பூட்ஸ் கால்களின் ஓசை மட்டும் கேட்டுக் கொண்டேயிருந்தன தனது முடிவு சரியா என்பது பெரிய கேள்விக்குறியாகவே இருந்தது. தினேஷையும் காயத்திரியையும் பார்த்தாள். ஏதும் அறியாத அந்தப் பிஞ்சுகள் அவள் முகத்தை ஏக்கத்துடன் பார்த்தன. இன்று அவள் சிந்தனைகள் சற்று வித்தியாசமானவைகளாகவே இருந்தன அம்மாவின் நினைவுகள் அடிக்கடி வந்து அவளை வேதனைப் படுத்தின. தினேஷையும் காயத்திரியையும் அணைத்தபடி ''அம்மா, அம்மா'' வேதனை தீரும்வரை அழுதாள். ''கூடாது இனியும் நாங்கள் இந்த அடிமை வாழ்க்கையை வாழக்கூடாது. எங்கடை அம்மாவை இழந்து நாங்கள் வேதனைப்படுவது மாதிரி இன்னும் எத்தனை எத்தனை அம்மாக்களை இந்த மண்ணில் இழக்க வேண்டும்? என்ரை இரண்டு சகோதரர்களா அல்லது அனாதைகளாகப் போகப்போகிற ஆயிரமாயிரம் சகோதரங்களா? எண்ணங்களால் முடிவு எடுக்க முடியாது அவள் குழம்பியே போனாள். மதியம் வரும்வரை அவளுக்கு ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகங்களாகக் கழிந்தன.

இப்போது முடிவு கண்டவளாய் அம்மாவின் படத்தின் முன்னின்று உறுதி எடுத்துக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் வர்த்தகரின் வீட்டில் கொள்ளை முயற்சி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் பிரபல வர்த்தகர் ஒருவரின் பம்பலப்பிட்டி இல்லத்தில் ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டி ஒன்றினால் கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது நேற்று முன்தினம் காலை 8-30 மணியளவில் நான்கு இளைஞர்கள் வீட்டில் புகுந்து கொள்ளையடிக்க முயன்ற போது வீட்டிலுள்ளவர் குரலெழுப்பி அயலவரை உதவிக்கு அழைத்ததுடன் பொலிசாருக்கு தகவல் அனுப்பியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் கோஷ்டியொன்று வீட்டுக்கு விரைந்து ஒருவரை மடக்கிப்பிடித்து அவரை விசாரணை செய்ததின் அடிப்படையில் மற்றுமோர் இளைஞர் கைதானார்.

# ராஜீவ் கொலை வழக்கு ஆகஸ்டில் விசாரணை

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்படுமென்று விசேட புலனாய்வுப் பிரிவின் தலைவர் டி.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

49 பக்க குற்றப்பத்திரத்திற்கு இணைவான இருபதினாயிரம் ஆவணங்கள் பிரதி பண்ணப்படுகின்றதென்றும், யூலை மாதத்தில் இந்த வேலை முடிந்து விடுமென்றும் அவர் தெரிவித்தார்.

# பலம்பொருந்திய இலங்கை அமெரிக்கநலனுக்குநல்லது

[கொழும்பு]

பலம்பொருந்தியதும், ஸ்திரமானதும், சர்வதேச ரீதியில் போட்டியிடக் கூடியதுமான இலங்கையே அமெரிக்காவின் சொந்த நலன்களுக்கு உகந்தது என்று அமெரிக்க தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தொழில் நிர்வாகப் பிரதிநிதிகளின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் அமெரிக்க நிறுவனங்கள் மிகச் சிறந்த முறையில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்க வாய்ப்புகளை எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டார். இத்தகைய முதலீடுகளின் வாயிலாக இருதரப்புகளும் நன்மை அடைவதுடன், அதே சமயம் இரு தரப்புகளும் பலமடையும் என்றும் தெரிவித்தார்.

## வழக்கறிஞர் கண்டனம

சுவரொட்டிகள் ஒட்டுவதை தடைசெய்யும் அவசர சட்டம் ஜனநாயகத்திற்குஎதிரானது, எதேச்சாதிகாரமானது என்று அனைத்திந்திய வழக்கறிஞர் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவு தெரிவித்துள்ளது.

மாநில அரசின் கொள்கைகளுக்கு எதிராக ஜனநாயக முறையில்எழுப் பப்படும் குரலை ஒடுக்குவதே இதன் நோக்கம் என்றும் இச்சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.


G. A. Q.

1st. in Com

1992 / 1993

யாழ். பல்கலைக்கழகத்தினால் மேற்கூறப்பட்ட பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விரிவுரைகள்

ஆரம்பம் 27-06-1992 (8மணி)

விபரங்களையும், நேர அட்டவணையையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி

எஸ். அருள் நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-4602)


## சீட்டிழுப்பு முடிவுகள்

நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பழைய மாணவர் சங்கத்தினரால் 24-06-1992 பி.ப. 5 15 மணிக்கு கில்வர் மண்டபத்தில் இழுக்கப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:-

(1) 5956
(2) 4454
(3) 767

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

(1) 5103, (2) 3090, (3) 514, (4) 4118, (5) 5679, (6) 4066

இதற்குரிய பரிசில்களை 27-06-1992 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலையில் பெற்றுக்கொள்ளவும்.

(2719) தலைவர்

# லெப். நித்திலா நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

லெப். நித்திலாவின் மூன்றாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு அரியாலை கிழக்கு பூம்புகார் கிராமத்தில் அமைந்துள்ள நித்திலா கல்விக் கூடத்தில் இன்று காலை 9-00 மணிக்கு நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்களும் மற்றும் பலரும் கலந்து கொள்வார்கள்.

இதனை அடுத்து பல்கலை நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

## ஏனைய கட்சிகளுடன் சந்திப்பு

சிறிலங்கா ஜனாதிபதியைக் கடந்தவாரம் சந்தித்துப் பேசிய ஏழு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இனப்பிரச்சினைத் தீர்விற்குத் தாம் எடுத்திருக்கும் நிலைப்பாடு பற்றி விளக்குவதற்காக ஏனைய அரசியல் கட்சிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர் என்று கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேநேரம் கம்யூனிச கட்சிப் பிரமுகர்களுடன் இவர்கள் நேற்று முன்தினம் பேசினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூரியகிரகணம்

முழு சூரிய கிரகணம் வரும் ஜூன் 30 ஆம் திகதி நிகழ்கிறது. பிற்பகல் மணி 3 21 க்குத் தொடங்கி எட்டு மணிக்கு அது முடிவடையும்.

# செயலக வளவில் சைக்கிள் திருட்டு

யாழ். செயலக வளவினுள் விடப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் செயலக பாதுகாப்புநிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் திருடப்பட்டதைத் தொடர்ந்து செயலக நலன்புரி சங்கத்தினரால் இது தொடர்பாக புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டது.

இதன்படி செயலக ஊழியர்களுக்கு விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் வெளியார் செயலகவளவினுள் தனியான இடத்தில் விட அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இதனால் பாதுகாப்பற்ற இடத்தில் விடப்பட்டிருந்த சைக்கிளே நேற்று திருடப்பட்டது. (க,ச)

## அனுதாபக்கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சட்டவைத்தியத்துறைப் பேராசிரியர் நவரத்தினம்சரவணபவானந்தன் அவர்கள் 24-06-1992 அன்றுகொழும்பில் காலமாகி விட்டார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 28-06 92 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லமான இல. 1161, கொட்டா றோட் ராஜகிரிஜா, கொழும்பில நடைபெறும் அன்னாரது மறைவையொட்டிய அனுதாபக் கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்றுவெள்ளிக்கிழமை26 06-92 காலை 10-00மணிக்கு நடைபெறவுள்ளது.

- துணைவேந்தர்

(சி/4603)

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு

# கூட்டுறவு சங்க சமாச 10-வது ஆண்டு நிறைவுவிழா

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பத்தாவது ஆண்டு நிறைவு விழா 27 ஆம் 28ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்ச்சிகள் 27-ம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு சமாசத்தலைவர் ச.முருகநேசன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்ச்சியில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, யாழ். அரசாங்க அதிபர் கா.மாணிக்கவாசகர், பேராசிரியர் அ. துரைராஜா, ம. கனகசபை, ஞா.ம.ற. மகாராஜன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவர். தே. ஜெயராமன், சி கந்தசாமி, த நந்தகுமாரன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகள் காலை 9-00 மணிக்கு திரு க. மகாதேவன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்ச்சியில் யாழ். கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம், தி.சபாரட்ணம், பூ. க. இராஜரட்ணம் செல்விகுகுமாரசாமி ஆகியோர் உரையாற்றுவர்.

அந்நிகழ்ச்சியில் மலர் ஒன்றும் வெளியிடப்படும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சி இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 2 00 மணிக்கு சமாசத் தலைவர் ச. முருகநேசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ விங்கநாதன், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக புதுவை இரத்தினதுரை, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி செல்வி சாம்பவி, வை செந்தில்நாதன், செல்வி க. வைகுந்தராணி ஆகியோர் உரையாற்றுவர்.

பின்னர் கலைநிகழ்ச்சிகள், பரிசு வழங்கல் ஆகியனவும் இடம் பெறும்.

## பொருட்காட்சி

மனைப் பொருளியலும் கைத்திறனும் பொருட்காட்சி ஒன்று எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் காலை 9 00 மணி தொடக்கம் மாலை 6 00 மணிவரை யாழ்நகர் விக்டோரியா வீதி கலாலயாவில் நடைபெற உள்ளது.

## அவலங்கள்

சொண்டாள். கைகளும் கால்களும் உரமேறியது போல் இருந்தது. உறுதியுடன் நடக்கத் தொடங்கினாள். அதோ அவர்களுக்கு தஞ்சம் தரும் மாதாகோயில் காலகளின் வேகம் குறைய நிமிர்ந்து கோயில் முகப்பிலிருக்கும் சிலுவையைப் பார்க்கிறாள். மனதில் என்றுமில்லாதநிம்மதி. காதுகளிலே இப்போது அலைகளின் ஓசை கள்கேட்டபடியிருந்தன. தனிமைக் கடையிலிருந்து யாரோ கதைப்பது கேட்டது. "ராத்திரி கண்டீபாட்டில இருந்து இறங்கின ஆமியோட அடிபாட்டில ஒரு பொம்பிளைப் பிள்ளை செத்துப் போச்சாம். அதுதான் தோரணம் கட்டுறம்" மிகுதி எதுவுமே அவளுக்கு கேட்கவில்லை வேகமாகச் சந்தியால் திரும்பியவளின் கவனத்தை இவள் அடிக்கடி காணும் சுவரொட்டி ஈர்த்தது "நங்கள் விதைக்கப்படுகிறோம் வீழ்ந்தும்எழுகிறோம்" இதன் அர்த்தம் அவளுக்கு நன்றாகப்புரிந்தது. கால்களில் வேகம் அதிகமாக விடிவை நோக்கி நடக்கிறாள். அவள்போனவழியில் ஒருபுதிய அத்தியாயமே தெரிந்தது.

## அவிசாவளை

வீடொன்றை வாடகைக்கு எடுத்திருந்ததாகவும் இவர்கள் மீது சந்தேகம் கொண்ட அயலவர்கள் பொலிசாருக்குக் கொடுத்த தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

## பூஸா

தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் காலி-காரப்பிட்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களில் கடுமையான நிலையிலிருந்த இருவர்களில் ஒருவர் உயிர் இழந்துள்ளதாகவும் தென் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இந்தக் கோஷ்டி மோதல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ள தமிழர் எவரும் சம்பந்தப்படவில்லை என்றும், அகப்படவில்லை என்றும் பூஸா முகாம் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு

இவரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று மாலை 3.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை கோப்பாய் வடக்கு சனசமூகநிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் வைக்கப்படும். அங்கு இடம்பெறும் அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் புதைகுழியில் விதைக்கப்படும்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

25. 06. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4556

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-616, 24-6639, 42-849, 42-1293, 42-969, 24-4292, 42-7312, 22-7662, 40-1079, 42-970, 41-8617 24-1209, 25-4381, 25-8794, 36-4300, இதனுடன் I. C. R. C-21, S L F-03

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

27-5823, 41-5178, 22-7097, 26-562, 28-3306, 24-4479, 24-4612, 41-9396, 42-2364, 28-8051, 40-7584, 28-6748, 24-4390, 24-4854, 26-5143, 24-3063, 28-3289, 42-3495, இத்துடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்-22

நேற்று வெளிவந்த வடபகுதிக்கு வெளியே வந்த வாகன இலக்கங்களில்

24-4507 என்பதை 24-4504 எனவும்
41-9404 என்பதை 41-9480 எனவும்
26-4090 என்பதை 26-4990 எனவும்
40-2297 என்பதை 40-2292 எனவும்

திருத்திக் கொள்ளவும்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.